உ
சிவமயம்

சைவ வித்தியாசாலைகளில்
உபயோகிக்க வேண்டியவை
சபையார்
பால பாடங்களே

இந்துசாதனம்

சோமவாரத்திலும் குருவாரத்திலும் பிரசுரமாகும்

இந்துசாதன
ஆங்கில தமிழ்ப்
பிரசுரங்களை
உபயோகியுங்கள்

Registered as a Newspaper in Ceylon.
P. M. G. No. H. A. 59/300 of 1939.

மாசில் வீணையும் மாலை மதியமும், வீசுதென்றலும் வீங்கிள வேனிலும்
மூசு வண்டறை பொய்கையும் போன்றதே ஈச னெந்தை யிணையடி நீழலே.

விரோதி வருஷம் (1889) ஆவணிமாதம்
28-ம் திகதி ஆரம்பமானது.

புத்தகம் ௫௪]　யாழ்ப்பாணம்:— சித்திரபானு ௵ ஆனி ௴ ௪௳ (1942 ஜூன் 18 வியாழக்கிழமை)　[இலக்கம் ௨௨] 19

தூய்மை

மெய்யல்லா நெறிக்கட் செல்லுதலின்றி யறிவுடை யான்றோ ராணைவழி நின்ற சிந்தைசொற் செயல்கள் தம்முண் மாறுபாடாம லொழுகு மொழுக்கமே தூய வாழ்க்கையெனப்படும். சிந்தையின் விளைவாயே சொல்லும் செயலும் நிகழ்தலின் சிந்தைசொற் செயல்கள் தம்முளொத்தல் அவசியமென்க. உள்ளொன்று வைத்துப் புறம்பொன்று பேசியும் பிறபடச் செய்து மொழுகும் வேடதாரிகள் தூய வாழ்க்கையின ரெனக் கருதப்படார். "மனத்துக்கண் மாசில னாதலனைத்தறம்" என்றும் "புறந்தூய்மை நீரானமையு மகந்தூய்மை வாய்மையாற் காணப்படும்" என்றும் "வஞ்சமனத்தான் படிற்றொழுக்கம் பூதங்க ளைந்துமகத்தே நகும்" என்றும் கூறிப் போந்தார் செந்நாப்போதாரும். வாழ்க்கைக்கண் தரும சங்கடமோ தடுமாற்றமோ ஏற்பட்டவழி, உலகியலறிவும் மெய்ஞ்ஞான வநுபவ முதிர்ச்சியும் பெற்ற பெரியோர் துணைக்கொண்டே சிற்றறிவுடைய நம்மனோர் வாழ்க்கை செப்பஞ் செய்யப்படத் தக்கதாதலின், அறிவுடையான்றோ ராணைவழி நிற்றல் வேண்டப்படுமென்க.

அறிவு நிகழ இச்சையும் அதன்பின் தொழிலுமாகவே மக்கள் வாழ்க்கைநடைபெறுதலின், இச்சாரூபமான உணர்வின் விளைவாயே மனித ஒழுக்கம் நிலைபெறும். மக்கள் வாழ்க்கை சிறப்படைய வேண்டுமாயின் இடம் காலம் முயற்சிக்கும் முயற்சி செய்வான் நிலைக்கு மேற்றவண்ண மிச்சை யுணர்வுகள் தத்தமக்குரிய எல்லைக்குள் நிற்கும்படி யடக்கி யாளப்படுதல் வேண்டும். காமம் வெகுளியச்சமாதிய இச்சையுணர்வுகளை யடக்கி யாளுதலின்றி யவை வசப்பட்டு நிற்பான், வாழ்க்கைப் பயனை யுணர்ந் ததற்கேற்கத் தன் சிந்தைசொற் செயல்களைச் செப்பம் செய்யு மாற்ற லிலனாகிப் பல்வகைச் சிறுமையையு மெய்துவன். உடலையும் பிரபஞ்சத்தையுமே போற்றி யவைசார்பான ஆசையால் மெலிவெய்தி நிற்போனாதலினச் சிறுமைகள் வரினும் முனைப்பும் வாழ்க்கையைப் போற்றி நிற்றலியல்பே. மனம் ஆசையைப் பற்றி நின்றவழி சிந்தைசொற் செயலெலாம் ஆசைக்கிலக்காயபொருட் சார்பாகவே செல்லும். இவ்வாறு பொருளல்லாப் பொருண்மேற் சென்ற ஆசையி லழுந்தி நின்ற அப்பொருட் சார்பாகத் தன்சிந்தைசொற் செய லெல்லாவற்றையும் செலவிடுவான் சற்றனைக்கண்ணு முண்மை தேறமாதிலன். இவன் சிந்தைசொற் செயல்கள் தூய்மையடைதலுமில்லை. உடலையும் பிரபஞ்சத்தையு மவை சார்பான பிறவற்றையும் பொருளென மயங்கி ஒழுகும் ஒழுக்கம், அச்சம் வெகுளி காமம் அழுக்காறு முதலியவற்றைத் தந்து மனத் தூய்மையைக் கெடுத்தலே யன்றி வாழ்க்கையைப் பல்லாற்றானும் நிரம்பாமைக்கு நிலைக்களமாக்குந் தகையதெனபது மிக்கவதானிக்கத் தக்கது. நிலையில்லாத இவ்வற்ப பொருட்களைப் பெற்றவழி யிவையழியுமோ என்ற பயம், இவற்றிற்குக் கேடு செய்வார் மாட்டுக் கோபம், கேடு நிகழாக் காக்கும் கவலை, இவற்றைப்பெற்று வாழ்வார்மாட் டழுக்காறெனத் துன்பம் மேலும் மேலும் பெருகத் தூய்மையும் குறைந்து கொண்டே போம். இத்தகைய வாழ்க்கை, விரதம், நியமம் மெய்யுணர்வு முதலியவற்றாற் பொலிவுற்று விளங்குதலசம்பாவிதம். காமக்குரோதாதிகளாற் கலக்குண்டு சலிப்பெய்தாத மனச்சாந்தியோடு மெய்ப்பொருட் சேர்க்கையை நோக்கியே தூய வாழ்க்கை நடைபெறும். பேராசை யச்சம் அழுக்காறுதியன ஆடல் செய்து நிற்கும் மனம் தூய்மையுடைய தாகாது; மனம் தூய்மையில்லாதவிடத்து வாழ்க்கை தூய்மை யடைவதுமில்லை.

ஆன்மா சார்ந்ததன் வண்ணமாகும் தன்மையது என்பதும், உறைப்பாக நிகழும் பாவனையால், பாவிப்பான் பாவிக்கப்படும் பொருளின் தன்மையை யெய்துதல் திண்ணம் என்பதும், அறிவுடையோர் பலர்க்கும் ஒப்ப முடிந்த உண்மைகள். "நினைப்பவர் மனம் கோயிலாக் கொண்டவன்" என்றும் "உறவுக்கோல்நட் டுணர்வுக் கயிற்றினால் முறுக வாங்கிக் கடைய முன்னிற்குமே" என்றும் வரும் அருள் வாக்குக்கள் சிந்திக்கத்தக்கன. நிலையில்லா அற்ப பிரபஞ்சப் பொருட்களின் சார்பால் துன்பமும் சிறுமையு மடைத லியல்பே. ஐம்பொறியா லிலாத பேராசை யச்சம் கவலை அழுக்கா றுதியவற்றாலழுக்குண்டு சலிப்பெய்திய மனத்தினர் வாழ்க்கை யெவ்வாற்றானும் சிறப்படையாது. அவர் மனச்சாந்தி பெறுதலும் உண்மை புணர்தலுமில்லை. அந்தக் காரணசுத்தி முத்திக்கு இன்றியமையாச் சாதனமாகும். "அந்தக் காரணசுத்தி தானுவ தவாவற்றிடுதலே" என்பது பிரபுலிங்கலீலை. "உடம்பைக் காணத்தை யுடலைத் தானென் றழலாம லடக்கத் துறந்து" பிரபஞ்ச வைராக்கியமும் மனச் சாந்தியும் பெற்று மெய்யுணர்வு கைவந்து சிவத்தையே பொருளெனக் கொண்டதனையே நியானித்தல் பாவித்தலைச் செய்யும் சிவஞானச் செல்வர் சிவசாரூப்யமடைய பெய்திப் போதிவு போற்றவர்களோடு விளங்கிப் பேரின்பப் பெருவாழ்வடைதல் சாலவும் பொருத்தமானதே. "பேரின்பப் பெருவாழ் வடைந்த பின் விரும்பத்தக்க தொன்றில்லையாதலின், விரும்பியதை யடைதற்கிடையூறு செய்வார் பாற்செல்வதாகிய கோபமும், தாம் விரும்பிய பொருள் கிடையாமற் போமோ என்று கொள்ளு மச்சமும், விரும்பியபேறு கிடையாதழிந் தோனுமம் சோகமும், தமக்குக் கிடையாதபேறு பிறர்மாட்டுக் கண்டவழித் தோன்று மழுக்காறுமென் றின்னனபல சிறுமை நீங்கி வீறுடை வாழ்க்கை வாழ்தல் மெய்ஞ்ஞானப் பெரியா ரிறைவன் சேர்க்கையாற் பெற்ற பயனென்பது வெளிப்படை" ஒருவர் பேரின்பப் பெருவாழ்வடைதால் பிறர்க்குண்மை விளைதலன்றிக் கேடில்லை யென்பதும் அந்தக்காரணசுத்தியால் நித்தியாநித்திய வஸ்து விவேகம் பெற்று மெய்ப்பொருள் நாட்டம் செய்வார்பால், பொருள் புகழ் பற்றி யெழும் அழுக்காறவா வெகுளி முதலியன தோன்றுதற் கேதுவில்லை யென்பது மிங்குணரத்தக்கவை. அந்தக் காரணசுத்தி மேலும் மேலும் வளர அடியார்பால் அறிவாற்றல்கள் விசேடமாக விளங்குதலை யவர் வாழ்க்கையைச் சிறிதேனும் நோக்கினோர் கண்டறிவர். இச்சிவாநுபூதிச் செல்வரும், சிந்தைசொற் செயல்களிற் றூய்மையுடைமையே வாழ்க்கை சிறடைதற்குச் சாதனமாகு மென்னு முண்மையைத் தம் சொற் செயல்களால் வலியுறுத்திக் காட்டுவர்.

சினமுத லியமயல் தீர மாற்றுப
விணைதபு வாய்மையா
மொழுக்கை யன்பெனும்
புனலொடு விரவியே
பூசி னல்லது
மனமெனு மலையிடை
வாரி யிக்கமே
(பிரபுலிங்கலீலை)

என்றும்,

'மெய்வந்த நெஞ்சி னல்லாலொரு
காலும் விரகர்தங்கள்
பொய்வந்த நெஞ்சிற் புகலறி
யாமடப் பூங்குயிலே'
(அபிராமியந்தாதி)

என்றும் வரும் ஆன்றோர் வாக்குகளு மிவ்வுண்மையை வலியுறுத்தும்.

இனி, குலம் குடி கோத்திரம் சாதியெனப் பல பொருளுங் கூடி

தொடர்ச்சி 4-ம் பக்கம்

இந்தியர் வானசாஸ்திர வளர்ச்சி

The Growth of Indian Astronomy

வானசாஸ்திர மாணவன்

(முற்றொடர்)

இவ்விதம் வகுக்கப்பட்ட இருபன்னிரு பிரிவுகளுள் ஒவ்வொரு பிரிவிலும் சூரியன் செல்லுங்காலம் ஏறக்குறையச் சந்திரன் ஆகாயத்தைச் சுற்றி வருங்கால வெல்லையுடன் ஒத்திருத்தலினால் அதனையும் மாசமென வழங்கத் தொடங்கினர். ஆகவே அவர்கள் சாந்திரமாச (Synodic Month) அறிவையும், சௌரமாச (Tropical Month) அறிவையும் பெறலாயினர்.

மேலும் சந்திரன் பதினைந்து நாட்களுக்குத் தேய்ந்தும் பதினைந்து நாட்களுக்கு வளர்ந்தும் வரும் பொழுது காணப்படுவதாகிய விதம் விதமான தோற்றங்கள், மைதானத் திறந்திரிந்து தங்கள் ஆடுமாடுகளை மிக்க கவனத்துடன் பாதுகாத்த மாந்தர்களுக்கு அளவிறந்த ஆச்சரியத்தைக் கொடாதிருக்க முடியாது. இதனால் இவர்கள் பூரணை (Full Moon) அமாவாசை (New Moon) காலங்களையும் அறியலாயினர்.

இதன் பின்னர் அவர்களறிந்தது அயனங்க (Solstices) ளாகும். (அதாவது சூரியன் வடக்கேயும் தெற்கேயும் போவதுபோற் றோறல்) நாடோடிகளாகத் திரிந்து கூடாரங்களில் வசித்த அப்பூர்வ குடியினர், அவர்களின் கூடாரக் கம்புகள் காலையில் மேற்கே * நிழல் விழுத்துவதையும் மத்தியானத்தில் நிழல் குறைந்து வடக்கேவிழுத்தலையும், மாலையில் கிழக்கேவிழுத்தலையும் கவனியாமலிருந்திருக்க முடியாது. மத்தியானத்தில் குறுகிவிழும் நிழல் சில காலங்களில் அதிகம் வடக்கே நீண்டும், சில காலங்களில் வடக்கே குறுகியுமிழுந்ததை அவதானித்து சூரியன் வடக்கேயும் தெற்கேயும் செல்வதால் அவ்வித நிகழ்ச்சி ஏற்படுகிறதெனப் பகுத்து அறிந்தனர். இந்நிகழ்ச்சி முறையே உத்தராயணமென்றும் தட்சணாயனமென்றும் அழைக்கப்படலாயிற்று.

மேலும் இவ்விரு அயனங்களுக்கும் இடைப்பட்டகால எல்லையை விஷுவம் (Equinox) என்றழைத்தனர். விஷு என்பது பூமியினுள்ள கிராட்சரேகை (Equator) க்கு நேராக ஆகாயத்திற் செல்வதாக (ஆகாய க்ஷேத்திரத்தின் கிராட்சரேகை(Celestial Equator)யாக)ப் பாவிக்கப்படும்ரேகை. அவ்விரேகையில் சூரியன் உச்சங் கொடுக்குங் காலம் விஷு புண்ணிய காலம் என்று வழக்கப்படலாயிற்று.

ஆகவே வருடத்தில் நிகழும் இவ்விரு அயனமும், இருவிஷுவமும் ஆகிய நான்கு காலங்களையும் விசேடமுடையதெனக்கொண்டு அக்காலங்களில் கடவுளை நோக்கி யாகஞ் செய்யவுந் தொடங்கினர். இவ்யாகஞ் செய்யும் வழக்கமே அங்கிருந்து புறப்பட்டு வேறிடங்களிற் குடியேறிய சீனர், அராபியர், எகிப்தியர், கிரேக்கர் என்பவர்களிடம் பிற காலத்தில் காணப்பட்டது. அவர்கள் தாம் சென்ற இடங்களிலெல்லாம் யாகஞ் செய்தற்குப் பெரிய பெரிய மேடைகளையெல்லாம் அமைத்தனர்.

எகிப்தியர் கட்டிய மேடைகள் உருவங்கள் ஆகியன மிகச் சிறந்தனவாகும். அவற்றுள் மனித உட

தொடர்ச்சி 4-ம் பக்கம்

---

* சூரிய சித்தாந்தம் முதலிய கிரந்தங்களிற் கூறப்பட்டிருக்கிற காமவலயம் என்ற காலமறியும் கருவி இயற்றப்பட்டதற்கு இந்த நிழலின் சலன முறையே ஆதி காரணமாகும்.

பாட சாலைகளுக்குப் பண உதவி வழங்கும் முறை

முற்றாக மாற்றியமைக்க ஆலோசனை

ஆசிரியர்களின் சம்பள விகிதங்களையும் பாடசாலைகளுக்கு அரசாங்கம் பண உதவியளிக்கும் முறையையும் முற்றிலும் திருத்தியமைக்கக் கல்வி விசேஷ நிர்வாகசபை ஆலோசித்து வருவதாகத் தெரிகிறது.

இப்பிரச்னைகள் சென்ற திங்கட்கிழமை காலை நடைபெற்ற விசேஷ நிர்வாகசபைக் கூட்டத்தில் ஆலோசிக்கப்பட்டன. இவைசம்பந்தமாக விரிவான திட்டங்களைத் தயாரித்துச் சமர்ப்பிப்பதற்கு ஓர் உப நிர்வாகசபையை நியமிக்க வேண்டுமென்று குறித்த கூட்டத்தில் நிர்மானிக்கப்பட்டது.

மகாசங்கை. எம். ஜே. லெகோக் மிஸ்றர் எச். எஸ். பெரேரா என்னுமிருவருமே உப நிர்வாகசபையின் அங்கத்தவராவர்.

பாடசாலைகளுக்குப் பணவுதவி செய்யும்விஷயத்தில் இப்போதைய முறை மிகத் திருப்திகரமற்றதென்று விசேஷ நிர்வாகசபை உணருவதாகத் தெரிகிறது. மாணவரிடம் சம்பளம் வசூல் செய்யும் பாடசாலைகளுக்கும் சுயபாஷா பாடசாலைகள் போன்ற இலவசக் கல்வி போதிக்கும் ஒரே மாதிரியான பணவுதவியை யளிக்கும் முறை மோசமானதென்று நிர்வாகசபை அபிப்பிராயப்படுவதாகத் தெரிகிறது.

அரசாங்கப் பணவுதவியளிப்பது சம்பந்தமான இரண்டு விதமான பாடசாலைகளுக்கிடையே நீதியான பேதங்களையேற்படுத்தி அவற்றிற்குரியவாறு பணவுதவியை யளிக்குந் திட்டம் ஒன்றைத் தயாரிக்க வேண்டுமென்று ஆலோசனை கூறப்படுகிறது.

இப்போதைய பணவுதவி முறை சம்பந்தமாக எவ்வித மாறுதல்களை ஏற்படுத்த வேண்டுமென்பது பற்றியும் ஆசிரியர்களின் சம்பளத்திட்டங்களைப்பற்றியும் ஆலோசனைகளைச் சமர்ப்பிக்கும்படி உபநிர்வாகசபைக்குத் தெரிவிக்கப்பட்டிருக்கிறது.

புதிதாக மற்று மிருவருக்கு நோய்

அநுராதபுரத்தில் பேதியின் நிலைமை

அநுராதபுரத்தில் நோயாளிகளை ஒதுக்கி வைக்கும் ஆஸ்பத்திரியிற் சென்ற வெள்ளிக்கிழமை இரவு மற்றுமிருவருக்குப் புதிதாகப் பேதி நோய் கண்டிருப்பதாக அறிவிக்கப்பட்டிருக்கிறது.

யாழ்ப்பாணத்திற் புதிதாக எவருக்காவது அம்மைநோய் பீடித்திருப்பதாக அறிவிக்கப்படவில்லை யெனினும் நோயாளிகளோடு ஊடாடிய தாகச் சந்தேகிக்கப்பட்ட 65 பேர் கண்டுபிடிக்கப்பட்டு ஒதுக்கி வைக்கப்பட்டிருக்கின்றனர்.

இப்பகுதியிற் சனங்களுக்கு அம்மைப்பால் குத்தும் பிரசாரமொன்று ஆரம்பிக்கப்பட்டிருக்கிறது.

சைவமும் தாவர போசனமும்

கடவுளைப்பற்றியும் அவரை அடையும் நெறியைப்பற்றியும் கூறு நூல் இவ்வுலகத்துப் பலவுண்டு. இவையெல்லாம் திரிகாலஞானிகளால் ஆக்கப்பட்டனவும், அதிவிவேகிகளால் ஆக்கப்பட்டனவுமென இரு பகுப்புள் அடக்கப்படலாம். திரிகால ஞானிகளால் ஆக்கப்பட்டனவெல்லாம் அதி விவேகிகளாய் இருப்பினும் விளங்கும் தரத்தவையல்ல. எக்காரணத்தாலெனின் ஞானிகளிடமிருந்து கற்றுவந்தவான் முறைக்கல்வி இல்லாது போகவே விஷயங்கள் விளக்கொளுக் காத்தவாயின.

உலகெலாமுணர்ந் தோதற் கரிய சிவபிரான் உயிர்கள்மீது வைத்த பெருங்கருணையான் உமை பங்கராய் வீற்றிருந்தருளும் இடங்கடோறும் சைவம்செறிந்திருக்கின்றது. இன்னால் இனைகாலத்து ஆக்கப் பெற்றதென்னும் ஆதியில்லாச் சைவசமயத்தில், புலாலுணவை நீக்கித் தாவர உணவை நியமித்திருத்தல் ஆழ்ந்து ஆராயப்படத்தக்கதொன்று. ஆதலின் இவ்விரண்டற்கு மிடையே நெருங்கிய தொடர்புண்டென்பது மறுக்கமுடியாத ஒரு உண்மை. பதார்த்த குணத்திற்கும் மனித குணத்திற்கும் சம்பந்தமுண்டு. காரிப்பென்னும் குணம் மனிதனிடத்து உற்பத்தியாவதற்கு மது காரணமாயிருப்பதால் மது விலக்கப்பட வேண்டியதாயிற்று. மாமிச போசனத்தால் எம் போலியரால் அறியப்படாத நுண்ணிய குண விகற்பங்கள் மனிதருக்குண்டாகின்றன.

கொலை, களவு, கள், காமம் புலாலுண்ணல் ஆகியன விலக்கப்பட வேண்டியன. அவை பொதுவாக எல்லாச் சமயத்தவராலும் சிறப்பாகச் சைவசமயத்தாராலும் விலக்கப்பட்டவை. இக்கொடுஞ் செய்கைகளை அதிகமாகவோ அல்லது குறைவாகவோ நீக்கவல்லது தாவரபோசனமே. சாத்விக குணத்தை உண்டாக்குவதும் அதுவே. அதனால் துன்பங்களை நீக்கி இன்பங்களைச் செய்யும் மனம் மனிதனுக்குண்டாவதன்றியும் தாவரத்தையே உணவாகக் கொள்ளும் ஜீவபிராணிகள் மாமிசத்தை உணவாகக் கொள்ளும் ஜீவபிராணிகளைக் காட்டிலும் சாதுவானவைகளாகவும் காணப்படுவது யாவருமறிந்ததே. இவ்வாறு முனிவரும், பெரியோரும் முக்குண விகற்பங்களைக் கண்காராய்ந்து மனிதனுக்கேற்றவை இவையென்று வகுத்திருப்பதை நன்கு நாமறியவேண்டும். இவ்வுண்மையறியாத புறச்சமயங்களெல்லாம் உணவைப்பற்றி விதிவிலக்குக் கூறாது கடவுளைப்பற்றிக் கூறிச் செல்வதனால் வெறும் வாய்ச்சித்தாந்தம் கூறுமதென்று சொன்னால் தக்கதல்லவா!

கந்த மூல பலாதிகளையே உண்டு ஐம்புலன்களையும் பொறிகளின் வழிச் செல்லாது அடக்கி நிஷ்டைகூடியிருந்த முனிபுங்கவர்களின் மன அமைதிக்கு ஒருசில காரணமாயிருந்தது தாவரபோசனம் என்று கூறல் மிகையாகாது. தாவர போசனமும் சைவமும் இல்லாதுள்ள நாடுகளில் சண்டைகளும் தீச்செயல்களும் மிக மிகக் குறைவாகக் காணப்படுவதை நாம் கண்கூடாகக் காண்கிறோம். சைவ சமயிகளின் முக்கிய அடையாளமாகிய திருவெண்ணீறும் தாவரசத்துடன் கூடியதே. தாவரசத்துச் செறியாத இடம் ஒன்றுமேயில்லை. சைவசமயிகளால் விரும்பப்படும் பசுவைப் பாருங்கள். அது எவ்வளவு சாந்தமான சௌம்யமாகவும் சுத்தமானதாகவும் காணப்படுகின்றது. இதற்குக் காரணம் தாவரபோசனமன்றோ? ஒரு தாவர போசனியையும் ஒரு மாமிச போசனியையும் ஒப்ப நோக்குவோமானால் அவர்களின் குண வேற்றுமைகளை யாம் அறிதல்கூடும். சைவசமய சாஸ்திரங்களெல்லாவற்றிலும் கொலையிகப் பாவமான செயலெனக் கூறப்படுகின்றது. சைவசமயத்தவர்கள் கோவில்களில் ஒரு பயனும் கருதாது கொண்டாட்டத்திற்காகவும் இறைச்சி வியாபாரத

(தொடர்ச்சி 4-ம் பக்கம்)

பக்தி

[ஜி. சுந்தரமய்யர்]

'பத்தித் துறையிழிந் தானந்தவாரி படிவதினால்
புத்தித் தரங்கந் தெளிவ தென்றோ'
—கந்தரலங்காரம்

"பத்தியால் யானுனைப் பலகாலும்
பற்றியே மாதிருப் புகழ்பாடி
முத்தனா மாறெனைப் பெருவாழ்வின்
முத்தியே சேர்வதற் கருள்வாயே" —திருப்புகழ்

திருநீறும், செபமாலையும், உபதேச மந்திரமும், பேசா அநுபூதியும், சகப்பேறும் முருகனால் பெற்ற பக்தர் அருணகிரியார் இம்மாதிரிக் கதறியிருக்கிறார். நமது தமிழ் நாட்டில் பல அடியார்கள் கடவுள் சந்நிதானத்தில் தங்கள் நெஞ்சு உருகி இதுபோலவே பாடியிருக்கிறார்கள். இப்பாடல்களை நாம்கேட்கும்போது நம்மை அறியாமலே இன்ப வெள்ளத்தில் மூழ்கி நம்மையும் நமக்குள்ள வேறு வேலைகளையும் மறந்து விடுகிறோம். ஆனால் வாசனா தோஷத்தாலோ, கரும வினையின் பயனாலோ, அல்லது படிப்பின் மிகுந்த முதிர்ச்சியாலோ, "பக்தியாவது, முக்தியாவது" என்ற எண்ணங்களும் நம்மைப் பிடித்துக் கொள்ளுகின்றன.

உள்ளவைகளை உண்மையாய்ச் சொல்லும் போராற்றல் வாய்ந்தவரும் அத்தி முகமாகிய ஆனந்தரூபம்கொண்ட கணபதிக் கடவுள் வரப் பிரசாதம் பெற்ற ஔவை மூதாட்டியார் "ஆலயந் தொழுவது சாலவும் நன்று" என்று எழுதி வைத்துப் போயிருக்கிறார். ஆலயம் போகும் வழக்கம் நின்று போகவில்லை. உள்ளத்திலுள்ள கடவுளை நினைத்துவிட்டால் போதாதோ; கோயில் பூஜை பார்த்து ஆவதென்? என்ற வினாக்களும் கிளம்புகின்றன. நம்பிக்கையற்றதாகவுமில்லை; நம்பிக்கை நிலையாய் நின்றதாகவுமில்லை. கால விநோதம் இப்படியிருக்கிறது! இதுவும் அவன் திருவிளையாடலதானே!

தேவாரம் முதலியன அடங்கிய திருமுறைகளை அறியாமலொருவன் பொய்யென்று சொல்லிவிட்டால கோபம் வந்து விடுகிறது. நமக்குப் பூரண நம்பிக்கை ஏற்பட்டுவிட்டதோ? நாம் நம்மைக் கோபித்துக் கொள்ள வேண்டாமோ? தேவாரம் படிப்பது என்றோ?

நமது நாட்டைக் கரும பூமியென்றும், தரும பூமியென்றும், பக்தர்கள் மலிந்த நாடென்றும், சித்தர்கள் உலாவும் நாடென்றும், முத்தர்கள் விரும்பும் நாடென்றும் பலவிதமாய் நமது நாட்டைக் கவிகள் சிறப்பித்திருக்கிறார்கள்.

வள்ளுவனார் சிறந்த ஞானியாவர். குறள் என்னும் ஒப்பற்ற ஒரே நூலை அருளிச் செய்திருக்கிறார். அதை வேதம் என்று கொண்டாடுகிறோம். அதில இல்லாததவைகளுமுண்டோ? அவருமா புலவரோடும் பித்தர்களோடும் சேர்த்து கொண்டு உண்மையல்லாததைச் சொல்லியிருப்பார். அவர் நமக்குப் புகட்டும் நல்லறிவு யாதெனின்,

"கோளில் பொறியில் குணமிலவே எண்குணத்தான்
தாளை வணங்காத் தலை"

நம்மில் சிலர் பெருத்த கல்விமான்களாயிருக்கிறார்கள். அவர்கள் ஆராய்ச்சியில் வல்லவர்களாம். "கடவுள் வாழ்த்து"ம் இன்னும் சில அதிகாரங்களும் வள்ளுவனார் பாடவில்லை அல்லது பாடியிருக்க மாட்டார் என்ற தங்கள் பொன்போன்ற மொழிகளை வெளியிட்டிருக்கிறார்கள். நல்ல வேளை! அவ்வதிகாரங்களை நீக்கிவிட்டுப் புத்தகத்தை வெளியிட ஒருவருக்கும் துணிவு ஏற்படவில்லை, கடவுள் வாழ்த்துதான் மிகவும் பழைய நூல்களுக்கும் ஆரம்பமாயிருப்பதைக் காண்கிறோம். வள்ளுவனார், புது வழக்கம் ஏற்படுத்தக் காரணமென்னவோ?

கடவுள் தானுண்டோ என்கிற விஷயத்திலும் நமக்குச் சந்தேகங்களை உண்டுபண்ணக் கூடிய நூல்களும் மிகவும் பழைய கௌரவமாய் நமது நாட்டில் உலாவுகின்றன. என்ன செய்யலாம்!

பக்தி செய்வதைத் தவிர நமது முக்கியமான கடமை வேறுமுண்டோ என்னும் விஷயத்தைப் பற்றி ஒரு சிறு கட்டுரை எழுத முயற்சிக்கிறேன். நல்லதை உட்கொண்டு தவறுகளை ஒதுக்க வேண்டும்.

பக்தி என்பது ஒரு குணவிசேஷம்; ஒருவிதமான பற்று, இன்பம் விளைவிக்கும் ஒருவிதமான பிரேமை; பரமப்ரேமை; என்னலாம். ஒரு ஜீவன் கடவுளிடத்தில் வைக்கும் இச்சை, பற்று, பிரியம், அவா, ஆசை, காதல் அல்லது அன்பு இவைகளுக்குத்தான் பக்தியெனப் பெயரிட்டிருக்கிறார்கள். தேவுமாலோ அல்லது கடவுள் ஆசையோ முதிர முதிர மனம் பக்குவமடைந்து ஓர் உன்னதமான நிலையிலோ இன்ப வெள்ளத்திலோ மூழ்கி நின்று விடுகிறது. கடவுள் நினைவு விடுவதில்லை; மற்ற எண்ணங்கள் தோன்றுவதில்லை. யாது நேரினும் கவலையாவது பயமாவது பாதிப்பதில்லை. பரிபூரணனாகக் கடவுளோடு மனம் ஒன்றுப் விடுகிறது.

மனத்தின் நிலைக்குத் தக்கவாறு அல்லது அன்பன் பக்குவத்திற்குத் தக்கவாறு படிப்படியாய் ஏற்படும் இன்பப்பெருக்கான நிலைகளுக்கு ஒவ்வொரு பெயர் கொடுக்கப்பட்டிருக்கிறது. பக்திவழியில் செல்வதற்கு விதிகளெல்லாம் விஸ்தாரமாய் நூல்களிற் காண்கிறோம். பலவிதமான பாகுபாடுகளும் செய்யப்பட்டிருக்கிறது. ஒவ்வொரு பக்தனும் தனக்கேற்பட்ட உணர்ச்சிகளையும், தான் அடைந்த பயன்களையும், தன்மனம் பக்குவமடைந்த விதத்தையும், தான் அடைந்த ஆனந்த நிலையையும் தெளிவாய் யாவரும் அறியும் வண்ணம் பறைசாற்றியிருக்கிறான். பக்தர்களும் யாவரும் பேரின்ப நிலையை அடைந்ததாகவும்சொல்லப்பட்டிருக்கிறது. இவை யாவும் நேயர்கள் அறிவார்கள். இவ்வளவுமா வெறும் கற்பனையாயிருக்கக் கூடும்.

என்பிலாத ஜீவன்கள் தவிர, பாக்கி எல்லா உயிர்களுக்கும் அன்பு என்கிற குணமுண்டென்பது தெளிவு. மனிதனோ உயிர்த்தொகுதியில் உயர்ந்தவன். அவனுக்கன்பில்லையென்று சொல்வது தவறாகும். அன்பு உள்ளத்தின் கண் உண்டாகும் நிகழ்ச்சி. அதைக் கண்கூடாய்ப் பார்க்க முடியாது. அனுமானித்துக் குறிகளால் அறியவேண்டும். வள்ளுவனார் குறளில் "ஆர்வலர் அன்பிற்கு முண்டோ அடைக்குந் தாழ்; புன்கணீர் பூசல் தரும்" என்றார். இரக்க முள்ளவருக்கு அன்புண்டு. அன்புள்ளவர்கள் நெஞ்சு கசிந்து உருகும். நெஞ்சு நெகிழும் தன்மையுள்ளோர்கள் கண்ணீர் சொட்டுவார்கள். அறையின் கதவு தாழ்ப்பாள் பனிரென்றத்தானே உடைபட்டுத் திறக்கப்பட்டதுபோல், விழிபுனல்கள் குதிபாயவும், மயிர்ப்புறம் பொடிக்கத் தேக முழுதும் புளகிதமெழவும், மொழிகள் குழறவும், உடம்பு கம்பலை கொள்ளுதலுமாகிய குறிகளைக்கொண்டுதான் அன்பின் வேகத்தைக் காணமுடியும்.

துன்பம் கண்டுழியும் இன்பம் கண்டுழியும் இக்குறிகள் மனிதனி

(தொடர்ச்சி 4-ம் பக்கம்)

வாழ்க அந்தணர் வானவரானினம்
வீழ்கதண்புனல் வேந்தனுமோங்குக
ஆழ்க தீயதெல் லாமரனாமமே
சூழ்க வையக முந்துயர் தீர்கவே

இந்து சாதனம்.

யாழ்ப்பாணம் சித்திரபானுஸு
ஆனிமீ ௪உ வியாழக்கிழமை

உணவுப் பொருள் நிலை

இதுகாறும் முடிவெட்டி இல்லையேற்படுறதட்டி ஒருவருக்கு ஒரு கிழமைக்கு இரண்டுபடி அரிசியென்று விதிக்கப்பட்ட ஒழுங்கு சென்ற செவ்வாய்க்கிழமை பின்னேரம் தொடக்கம் மாற்றி இனிமேல் வாரம் ஒன்றரைப்படியென்ற பிரமாணம் விதிக்கப்படலாயிற்று. இந்த நவமான பிரமாணத்தினால் இங்குள்ள சனங்கள் தைரியங் குன்றி "இன்னுமென்ன வருமோ" என்று அஞ்சுகின்றார்கள். ஆனால் அப்படி அஞ்ச வேண்டியதில்லையென எங்கள் அதிகாரிகள் சனங்களுக்குத் திடஞ் சொல்லுகிறார்கள். இந்நாட்டு மக்களின் பிரதான உணவாகவுள்ள நெல்லரிசிக்குச் சிலகாலம் முட்டுப்பாடு நேரக்கூடுமேயல்லாமல், இலங்கையில் உணவுப் பொருட் பஞ்சம் இப்போதைக்கு வர இடமில்லையென்று இங்குள்ள யுத்தகாலத் தேசாதிபதியாகிய ஸேர்.ஜியோவிறே லெயிற்றன் தெரிவிக்கின்றார். போதிய அரிசி இல்லாவிட்டாலும் இங்குள்ள மக்களுக்கு இப்போதைக்குப் போதிய கோதுமைமா வந்திருக்கின்றதென்றும், அந்த மாவை உணவாக உபயோகிக்கப் பயின்றுகொள்ள வேண்டுமென்றும் மேற்படி அதிகாரி தெரிவிக்கின்றார். "பசிவந்தால் ருசி வேண்டாம்; நித்திரைவந்தாற் பாய் வேண்டாம்" என்றொரு பழமொழியுண்டு. ஆனதால் கோதுமை மாவையும் வயிற்றுப்பசியை நீக்குவதற்கு உணவாக உபயோகிக்க வேண்டியதுதான் விதி. ஆனால் இந்நாட்டு மக்களுட் பலர் இந்தமாவை எப்படி உணவாக்கி உண்பதென்பதை இன்னமும் அறியாதவர்களாய் இடர்ப்படக் காண்கிறோம். அதனை இந்தியாவிற் சிலபாகங்களிற்செய்வதுபோல் 'ரொட்டி' பாகப்படுத்தி உண்ணலாமோ என்றால், அப்படிப் பாகப்படுத்துதற்காகிய நெய் சர்க்கரை முதலியவற்றை இந்த நாட்களிற் கிரயங்கொடுத்துப் பெற்றுக்கொள்ளுதல் முடியாமலிருக்கின்றது. செல்வராயுள்ளவர்கள் ஒருவாறு அப்பொருள்களைச் சம்பாதித்தல் முடியுமானாலும் ரொட்டி பாகம் பண்ண அறியாத நிலையில் இருக்கின்றார்கள். கோதுமைக் குருணையெனின் அதனை ஒருவாறு உணவாக்குதற்கு இங்குள்ளார் பலர் அறிவர்.

ஆனாற் கோதுமை மாவைப் பாகம்பண்ணி உண்ணுதற்கு இந்நாட்டிலுள்ள பெண்மக்கள் உதவி செய்ய வேண்டுமென்றும், இங்குள்ள வித்தியாசாலைகளில் உபாத்தியாயர்களாகவுள்ளவர்கள் கோதுமை மாவை நிதமும் பாகம்பண்ணி உணவாக உபயோகிக்கும் முறையைப் பிள்ளைகட்குப் பயிற்றுதல் வேண்டுமென்றும் மேற்படி அதிகாரி அறிக்கையிட்டுள்ளார்.

மேலும் இங்குள்ள மக்கள் குரக்கன் தினை சாமை மரவள்ளிக்கிழங்கு பனையோடியல் என்னுமிவைகளையும் தங்களால் இயன்றவரையில் உணவுப் பொருளாக உபயோகித்தல் வேண்டுமாம். இதனால் நெல்லரிசி முற்றாக இங்கு இனிமேல் வரமாட்டாவென்று இந்நாட்டு மக்கள் நினைத்து ஏங்க வேண்டா. இந்தியாவில் இந்த மாசங்கள் நெல்விளைவிற்குரிய காலமல்ல; நெற் போக காலத்தில் இந்தியாவிலிருந்து போதிய நெல்லும் அரிசியும் வருமென நாம் எதிர்பார்த்திருக்கலாம். ஆனால், அந்த விஷயத்திலும் ஒரு கஷ்டம் இருக்கிறது. அந்த நாட்டில் விளையும் உணவுப் பொருள்களைக் கடல்மார்க்கமாக இங்கே கொண்டுவந்து சேர்ப்பதும் இப்பொழுது ஆபத்திற்கு ஏதுவாகவிருக்கின்றது. ஏன் பகைவர்கள், பகைவர்களுள்ளும் யப்பானியர் தீமைசெய்யும்நோக்கமாகக் கடலில் எங்கெங்கே சஞ்சரிக்கின்றார்களென்பதைத் தீர்க்கமாகச் சொல்லமுடியாதாம்.

இவைகளையெல்லாம் உத்தேசித்து எங்கள் அரசினர் இப்பொழுது இங்குள்ள மக்களைப் பசியினால் அதிகம் வருந்தவிடாவண்ணம் தங்களால் இயன்ற முயற்சிகளைச் செய்கின்றார்கள். பழைய உணவுக் கட்டுப்பாட்டைத் தவிர்த்து எவரும் எவருக்கேனும் ஐந்துபுஷல் நெல்லை, அல்லது இரண்டரைப்புஷல் அரிசியை விலைக் கட்டுப்பாடின்றி விற்கலாம் என்ற பிரமாணத்தை இப்பொழுது அரசினர் விதித்துள்ளனர். போதிய அரிசி நெல் இந்நாட்டில் அகப்படுமேயானால் இந்தப் பிரமாணத்தினாற் சனங்களுக்குச் சுகமுண்டெனலாம்.

நாம் இந்தச் சமயத்தில் இன்னுமொரு விஷயத்தைவிட்டே பெரிதுங் கவலைப்பட வேண்டியிருக்கிறது. போதிய அரிசி அகப்படாவிட்டால் கோதுமைமாவை ஆக்கியுண்ணலாம். குரக்கன் சாமை தினை கிழங்கு முதலியவற்றை உணவாக்கி உண்ணலாம்; ஆனால் இந்த உணவுப் பொருள்களுடைய விலையெனிலோ முந்திய விலையைக் காட்டிலும் பல மடங்கு விலையேறிக் கொண்டன; எத்தனை மடங்கு விலையேறினாலும் உணவுப் பொருள்களைச் செல்வராயுள்ளவர்கள் வாங்குதல் முடியும். ஆனால் அன்றடித்து அன்று வாயிலிடும் ஏழைகளின்கதியென்ன? இந்தச் சிறிய இலங்கைத் தீவிலுள்ள மக்களெனிலோ,

'சேவித்தும் சென்றிரந்தும்
தெண்ணீர்க் கடல்கடந்தும்
பாவித்தும் பாராண்டும்
பாட்டிசைத்தும்—போஷிப்பம்
பாழினுடம்பை வயிற்றின்
கொடுமையால்
நாழி யரிசிக்கே நாம்'

என்ற விதமாகப் பலவகையான தொழில்களைப் பார்த்து வறுமையிற் செம்மையாகக் காலங் கழித்து வந்தார்கள்; அவர்கள் சீவனார்த்தமாகச் செய்து வந்த தொழில்களிற் பலவற்றை இந்த நேரத்திலே செய்தற்கு முடியாதவர்களாயிருக்கின்றார்கள். இதனாற் கையிற் பணமில்லாமல் இவ்வேழைகள் கஷ்டப்படுகின்றார்கள்; பசியெனும் பாவி இங்குள்ள மக்களுட் பெரும் பாலாரைப் பற்றி வருத்த அதனால் அல்லோல கல்லோலப் படுகின்றார் எங்கள் மக்கள். "கருப்பையின் முட்டைகரும் கல்லினுள் தேரைக்கும்—விருப்புற்றமுதளிக்கும் மெய்யனாகிய அந்த ஈசனே இந்த நேரத்தில் இங்குள்ள மக்களைப் பாதுகாக்க வேண்டும். ஆனதால் எல்லோரும் அந்த இறைவனை இரந்து போற்றுவார்களாக.

சீனி நிலைமை திருத்தமடைந்திருக்கிறது

கொழும்பு, ஜூன் 17—

சீனிக் கட்டுப்பாட்டுத் திட்டம் இப்பொழுது திருப்திகரமாக நடைமுறையிலிருந்து வருவதாகச் சொல்லப்படுகிறது. சிற்சில கடைக்காரர் அகவிலைக்குச் சீனியை விற்பனை செய்து வருகின்றனரெனினும் கட்டுப்படுத்தப்பட்ட சில்லறை விலையின் பிரகாரம் ருத்தலொன்றுக்குச் சதம் 22 வீதம் சீனி கிடைக்கக் கூடியதாயிருக்கிறது.

எனினும், வெளியூர்களில் சீனி நிலைமை திருப்திகரமாக விருக்கவில்லை. சில்லறை வியாபாரிகள் குறைந்து போன தமது சீனிக் கையிருப்பை மீண்டும் வாங்கி வைக்கத் தவறியதோ அல்லது அகவிலைக்கு விற்பனை செய்பவர்களிடம் தம்மிடமிருந்த சீனியை விற்றுவிட்டமையோ இந்நிலைமைக்குக் காரணமாகுமென அதிகாரிகள் கருதுகின்றனர். இவ்வியாபாரிகளுக்கு அனுமதிச் சீட்டுகள் வழங்கப்பட்டிருப்பதாகச் சொல்லப்படுகிறது.

உலகம் பலவிதக்கதை

(முற்றொடர்)

"நீர் நேரில் வந்து பார்க்கலாம்"

"என்னில் ஒன்றுந் தங்கியிருக்கவில்லை அம்மான்; எல்லாம் என் வீட்டுக்காரியிலேதான் தங்கியிருக்கிறது; இங்கே ஆளைக் கூப்பிட்டுவிட்டிருக்கிறேன், சொல்லுவதைச் சொல்லுங்கள், கேட்பதைக் கேளுங்கள்" என்று சிதம்பரப்பிள்ளை தமது மனைவியைச் சுட்டிக்காட்டி முருகருக்குச் சொன்னார். இதற்கிடையிற் சிவகாமித்தாய் "என் அப்படிச் சொல்லுகிறீர்கள், நீங்களில்லாமல், நான் பெண்ணாய்ப் பிறந்தவள், என்னால் என்ன முடியும்" என்று பதில் சொல்லிவிட்டு ஒரு புறத்தே ஒதுங்கி நின்றாள். "தங்கைச்சி, நீர்தான் இந்த விஷயங்களைப்பற்றி முயற்சி பண்ண வேண்டும்; நாங்கள் ஆண்கள், பல பல கருமங்களிலும் ஈடுபட்டு பறக்கிற காகம் இருக்கிற கொம்பு அறியா தென்ற விதமாக, ஓடித்திரிவதால் இப்படியான கருமங்களைப் பற்றி யோசிக்க நேரமே கிடையாதெனலாம்; அல்லாமலும், பின்னை, உம்மைப்பற்றி எனக்கு நல்லாய்த் தெரியும், உங்கள் குலமென்ன! குடியென்ன! கோத்திரமென்ன! சாதியென்ன! மரபென்ன! யோக்கியமென்ன! பெருமையென்ன! ஒழுக்கமென்ன! செல்வஞ் செல்வாக்கென்ன! படிப்பென்ன! அறிவென்ன! ஊரிலே உங்களையறியாதவர் ஆர் இருக்கிறார்கள், ஊரிலே உங்களுக்குத் தெரியாதவர்கள் ஆருண்டு; என்ன நேற்றின்று முளைத்த குடும்பமா! பாரம்பரையான குடும்பமல்லவா, இந்த விஷயத்திலே, தங்கைச்சி, நீர் கொஞ்சம் சிரத்தை வைக்கவேணும்; இனி, உங்கள் ஐயா உங்கள் சொல்லைத் தட்டிநடவா ரென்பது இந்த முருகனுக்கு நல்லாய்த் தெரியும், உங்களுக்கு நான் சொல்லுவதென்ன தங்கைச்சி..." என்று முருகர் ஒரு பாயிரம் படித்தார். வேறு பெண்களாயின் முருகருடைய முகத்துதி வார்த்தையில் மனம் ஈடுபட்டுவிடுவார்கள்; ஆனாற் சிவகாமித்தாய் விஷயத்திலே முருகருடைய வாக்குவன்மை அதிகஞ் செல்லாது, இவைகளையெல்லாம் ஆறுதலாகக் கேட்டுக்கொண்டு நின்ற சிவகாமித்தாய் "அண்ணே, நான் ஒன்றுக்கும் மாறல்ல, இப்பொழுது என்னை என்ன செய்யும்படி கேட்கிறீர்களென்பது எனக்கு விளங்கவில்லை" எனலும் "வேறொன்றுமல்ல, பிள்ளை, அவர்கள் மாற்றுச் சம்பந்தஞ் செய்யும் எண்ணத்தை இப்பொழுது விட்டு விட்டார்கள்; தங்கள் மகனுக்கும் உங்கள் மகனுக்கும் சம்பந்தம் பேசும்படி இப்பொழுது என்னைக் கேட்கிறார்கள்; அதனைத்தான் உங்களிடம் பேச இன்று வந்தேன்" என்றார் முருகர். "அது சரி அண்ணே, அவர்கள் யார், தகப்பனுடைய பெயரென்ன, அவர்கள் எந்தப்பகுதி, பெண்ணின் பிதா என்ன முயற்சி என்ற இவைகளையெல்லாம் விபரமாக எங்களுக்குச் சொல்லவேணும், சாதகம் பொருத்தமோ என்று நேரிற்பார்த்தறிய வேணும், இவைகளை விட்டு, அண்ணே, சொல்லுகிறே னென்று குறையெண்ணுகிறீர்கள்; சம்பந்தமென்றால் அது என்ன சந்தையிலே போய் வாங்கும் பொருள் போல்வதா? நீங்கள் அந்தப் பெண் பகுதியாரைப்பற்றிய விபரம் முழுவதையும் இப்பொழுது எங்களுக்குச் சொன்னால் நாங்கள் அதைப் பற்றி யோசித்து முற்றுச் சொல்வோம்" என்று சிவகாமித்தாய் சொன்னாள். "தங்கைச்சி, நீங்கள் கேட்பது முழுவதும் நியாயம்; நீங்கள் இப்படிக் கேட்கத்தான் வேணும்; நானுஞ் சொல்லத்தான்வேணும்; அவர்களைப்பற்றி உமக்கு நான் இன்றுவரையில் நேரிற் சொல்லாவிட்டாலும் ஐயாவுக்கு ஒரு அளவுக்கு எல்லா விபரமுஞ் சொல்லியிருக்கிறேன்; இப்பொழுது உங்களுக்கும் சொல்லிவிடுகிறேன்; இதுவரையில் உங்களுக்குச் சொல்லாமல் விட்டது என்மேல் தப்புத்தான்; அந்தப் பெண்ணுடைய பிதாவின் பெயர் என்னுடைய பெயர்தான். அதாவது அவருடைய பெயர் முருகேசபிள்ளை; அவர் பெரிய வியாபாரி, அவருக்குப் பிறவூர்களிலே இரண்டு மூன்று கடைகள் உண்டு; கடைகள் மாத்திரமல்லாமல் அந்தக் கடைகளின் கட்டடங்களும் அவருடைய சொத்தாகும். கண்டி முருகேசபிள்ளையென்றால் அவரைத் தெரியாதவர்களில்லையென்றுசொல்லலாம். அவருடைய நிலம் புலம் காணி பூமி பொருள் பண்டம் வீடு வாசல் மாடு கன்று அடிமை குடிமை செல்வம் செல்வாக்கு எல்லாம் அவர் காலத்திலே அவராலே தேடப்பட்ட தேட்டமாகும்.

இதுவரையில் அவர் தேடியதும் இப்பொழுது தேடுவதும் இனிமேல் தேடப்போவதுமாகிய எல்லாத் தேட்டமும் அந்த இரண்டு பிள்ளைகளுக்குந்தான். அந்தப்பிள்ளைகளுள்ளும் மூத்த மகனுக்குத் தகுந்த சீதனத்தோடு சாதிமரபிலே பெண் ஒழுங்குபண்ணியிருக்கிறது; ஆனதால் தம்முடைய பெண் பிள்ளைக்கே இனிமேல் தம்மிடமுள்ள வெல்லாம் கொடுப்பார்; இது நிசம். உங்களுக்கு நான் அதிகஞ் சொல்லவேண்டியதில்லை; இன்னும் உமக்கு ஏதுஞ் சந்தேகமிருந்தால், தங்கைச்சி, நீர் நேரில் வந்து பார்க்கலாம், நானும் இடத்திலே விசாரிக்கலாம்...." என்று முருகர் பாரதக்கதை படிப்பது போற் படித்துக்கொண்டு போனார்.

பணத்தைப் பார்க்கிலும் குணமே சிறந்தது

"அண்ணே, நீங்கள் சொன்னாற் போதாதா, நேரிலும் வந்து பார்க்க வேண்டுமா? அல்லாமலும் ஒருவர் வீட்டுப் பெண்ணை ஒரு முறையில்லாமல் நாம் போய்ப் பார்ப்பதற்கு எங்களுக்கு என்ன அதிகாரம். அப்படிச் செய்வது முறையல்ல; அது கிடக்க, நீங்கள் சொன்ன அந்த முருகேசபிள்ளை படித்தவரா? தெய்வபக்தி யுள்ளவரா? ஏதும் தானதருமஞ் செய்ததுண்டா? அந்தப் பரம்பரையில் யாருக்கேனும் ஏதும் கன்மநோய் பிடித்ததுண்டா? இவைகளைப் பற்றியும் ஆராய வேண்டும், அண்ணே, பணத்துக்குப் பொருள் பண்டத்துக்கு மாத்திரம் ஆசைப்பட்டுப் போகவொண்ணாது; பொருளைத் தேடலாம்; பொருளை மனுஷன் தேடவேயல்லாமல், பொருள் மனுஷனைத் தேடமாட்டா; சீதனஞ் சீதனமென்று இந்தக் காலத்திலே அதற்காகச் சிவனை விடுகிறோ மென்று எத்தனையோ பேர் பிடிவாதமாக நிற்கிறார்களென்பது நிசந்தான். ஆனால் என் பிள்ளைகள் விஷயத்தில், ஐயாவின் நோக்கம் என்னவோ நான் அறியேன், சீதனத்தை நான் பொருட்படுத்தமாட்டேன்; எங்கள் வீட்டிற்கு வருகிற பெண்ணாக, மாப்பிள்ளையாக, குலங்குடி ஒழுக்கம், சமயாசாரம் தெய்வபக்தி, தொன்மை, குடித்தனத்தை நடத்தும் ஆற்றல், கல்வியறிவு, ஈகை, தருமசிந்தனை முதலிய நல்ல குணங்களும் செயல்களு முள்ளவர்களாக வரவேண்டு மென்பதுதான் என் பிரார்த்தனை; இப்படியான தன்மைகள் இருக்குமானால் நாம் பெண்ணைப் பார்க்கத் தேவையுமில்லை; விசாரிக்கவேண்டிய ஆவசியகமுமில்லை" என்று சிவகாமித்தாய் சொல்லி முடித்தாள். இவைகளையெல்லாம் அவதானமாகக் கேட்ட முருகர் மனஞ் சோர்வடைந்தார்; சிதம்பரப்பிள்ளை ஆடாமல், அசையாமல் இடையில் ஒன்றும் பேசாமல் மழை பொழுக்குக்கு வைத்த பாத்திரம்போல் இருந்த இடத்தில் இருந்தபடியே மௌனத்துடன் காணப்பட்டார். பத்து நிமிஷம் வரையில் மூவருள் ஒருவரும் ஒன்றும் பேசவில்லை. சிதம்பரப்பிள்ளைக்குச் சொல்வதென்ன செய்வதென்ன என்பது புலப்படவில்லை. "அம்மான் உங்களைச் சிரமப் படுத்துவது சரியல்ல, இந்தக் காலத்திலே, பெற்ற பிள்ளைதானே நாம் சொன்னபடி நடக்குந்தானே என்று காத்திருப்பது தவறு; இந்த விஷயத்தில் எங்கள் மகனுடைய விருப்பத்தையும் உசாவி அறிய வேண்டியதுதான் முறை; ஆனதால் குறை யெண்ணாமல் அடுத்தகிழமை ஒருகால் இந்தப் பக்கம் வந்து போங்கள்; தம்பியின் எண்ணத்தையும் அறிந்து உங்களுக்குத் தீர்க்கமான ஒரு முற்றுச் சொல்லி விடுவேன்" என்று சிதம்பரப்பிள்ளை சொல்ல, "ஆம், ஐயா, நீங்கள் சொல்வது முழுவதும் நியாயம்; ஒருமுறையல்ல ஆறுமுறை வரச்சொன்னாலும் நான் சந்தோஷமாக வருவேன்; ஏதோ கருமம் சந்தோஷமாக நிறைவேற வேண்டுமென்பதுதான் என்னுடைய" என்று சொல்லிக்கொண்டு முருகர் அவர்கள் இருவரிடத்தும் அநுமதி பெற்றுச் சென்றார்.

கரிக்குருவி தலையில் பனங்காயைச் சுமத்தவா?

இவ்வண்ணமாக ஒருநாள் சிதம்பரப்பிள்ளை தம்மனைவியைப் பார்த்து, "நான் பிள்ளையைக் கேட்பது முறையல்ல, பெற்றதாய் எதனையுங் கேட்கலாம், பிள்ளைகளும் பிதாவுக்குக் காட்டிலும் தாய்க்கே தங்கள் மர்மங்களை வெளியிடுதலும் குறைகளைச் சொல்லுவதும் தேவைகளைத் தெரிவிப்பதும் இயல்பு; ஆனதால் அந்த முருகர் பேசிவந்த சம்பந்தத்தைப்பற்றி, தம்பியின் எண்ணத்தை நீயே "தட்டி, அறி" என்று இதமாகச் சொன்னார். மனைவியும் அப்படிச் செய்ய உடன்பட்டாள்; சிவகாமித்தாய் ஒருநாளிரவு தன் மகன் போசனஞ் செய்யுஞ் சமயம் பார்த்து "தம்பி உங்கள் அப்பர் உனக்குக் கல்யாணம் பேசுகிறார், உன்னுடைய எண்ணத்தையும் உசாவி அறியும்படி எனக்குச் சொன்னார்; அதுதான், மகனே, உன் நோக்க மென்ன; சொல்லடா கண்ணே" என்று ஆதரவுடன் கேட்டாள். தாய் சொன்ன வார்த்தையைக் கேட்ட சுந்தரேசுவரன் தாயைக் கவலையுடன் பார்த்து "அம்மா, எல்லா மறிந்த நீங்களும் என்ன இப்படிக் கேட்கலாமா? அப்பர் அப்படிச் சொன்னாலும் நீங்கள் அதை எனக்கு வந்து சொல்லலாமா? நீங்களே அவருக்குச் சமாதானஞ் சொல்லியிருக்கலாமே; இப்படியான ஒரு கேள்வியை நீங்கள் என்னிடங் கேட்பீர்களென்று நான் கனவிலும் காத்திருந்ததில்லை, அம்மா, நான் படித்து ஆளாதல் வேண்டும். அந்தக் குமாரசாமியண்ணன் இருக்கும் வரையில் என் படிப்பு முயற்சிக்கு ஒரு குறையும் வராது; அவரோடு பழகிய பின்னர்தான் படிப்பின் அருமையை அறிந்தேன். அம்மா நீங்கள் கேட்ட கேள்விக்கு இசைவதற்குக் காலமும் நேரமும் எங்கோ கிடக்கின்றன. கரிக்குருவியின் தலையிற் பனங்காயைச் சுமத்தப் பார்த்தீர்கள்; அப்பரும் நீங்களும் எனக்குக் கல்யாணஞ் செய்து வைத்து வேடிக்கை பார்க்க விரும்புகிறீர்கள் போலும்; அப்படியானால் இரண்டு பெரிய பாவைப்பிள்ளைகளை வாங்கி ஒன்றை மாப்பிள்ளை போலவும் மற்றொன்றைப் பெண்பிள்ளை போலவும் உடுத்தி அலங்காரஞ் செய்து கல்யாணம் நடத்தி வேடிக்கை பார்க்கலாமே" என்று வெறுப்புடன் சொன்னான். சிவகாமித்தாய் தன் மகனை அவ்விஷயமாகத் தான் கேட்டதை யிட்டுக் கவலைப்பட்டாள். எதுவும் காலமும் விதியும் கூடினாலன்றி நடவாதென்று தன்னாவில் உத்தேசித்தாள். "என் கண்ணே, என்மேற் குறையெண்ணாதே; உங்க அப்பர் உன்னைக் கேட்கச் சொன்னபடியாற் கேட்டேன்; உன் கருத்தை அவருக்குச் சொல்லிவிடுகிறேன்; நீ மனம் வருந்த வேண்டாம்" என்று தன் பிள்ளைக்கு ஆறுதல் கூறி அவனுக்கு உணவூட்டினாள். (வரும்)

பொலிஸ் சார்ஜன் மீது கத்திக்குத்து

உடனேயே அவர் உயிர் துறந்தார்

காலி திங்கள்

செகொடாப் பொலீஸ் நிலையத்தைச் சேர்ந்த சார்ஜன் ஜயசேட்டி இன்று குத்திக் கொல்லப்பட்டார். குத்தினவன் இன்னும் கைது செய்யப்படாமல் ஒளித்திருக்கிறான் எனக் கூறப்படுகிறது.

காலிப் பொலீஸ் நீதிபதி இன்று பின்னேரம் விசாரணை நடத்திய போது, பின்வரும் தகவல்கள் கிடைத்தன: சார்ஜன் ஜயசேட்டி தமது மோட்டார் சயிக்கிளில் காலிப் பொலீஸ் கோட்டுக்குப் போகும்போது, அளவுக்கு மிஞ்சிய ஆட்களை ஏற்றிச் சென்ற ஒருகாரை அவதானித்தார். அவர் அக்காரை நிறுத்திச் சாரதியை நோக்கி "லைசென்ஸை"க் காட்டும்படி கேட்டபோது, காரின் சேறுதாங்கியில் ஏறிச் சென்ற ஒருவன் அதில் தலையிட்டதாகத் தெரிகிறது. அவனுக்கும் சார்ஜனுக்கும் மிடையே வாக்குவாதம் எழ, அவர் சார்ஜனைக் குத்த எத்தனித்ததாகவும் தெரிகிறது. பின் அவன் தன் கத்தியை உருவி சார்ஜன மார்பில இருமுறை குத்தினான் என்று கூறப்படுகிறது. குத்து மார்பில் வாளாகத் தாக்கிச் சார்ஜனின் இருதயத்தையும் ஊடுருவிச் சென்றது. உடனேயே சார்ஜன் இறந்தார்.

ரூபா. 20 இனாம்

காரைநகரைச் சேர்ந்த நாகலிங்கம் கந்தையா என்னும் வாலிபனைச் சென்ற ஞாயிற்றுக்கிழமை 14. 6. 42 தொடக்கம் காணவில்லை. அவரின் வயது 16, நிறம் கருமை, உயரம் 4½ அடி வரையில் இருக்கும். அவ்வாலிபனைப் பிடித்துத் தருபவருக்கு அல்லது அவர் இருக்குமிடத்தைத் தெரிவித்துப் பிடிக்கத் துணை செய்பவருக்கு ரூபா. 20 இனாம் கொடுக்கப்படும்.

மு. மயில்வாகனம்
ஆசிரியர் இந்துக்கல்லூரி
யாழ்ப்பாணம்

Mis 61 18—22. 6. 42.

கரத்தைக்குட் கள்ளச் சாராயம்

கம்பஹா ஜூன் 13

பத்தளமை தெற்குப் பகுதியைச் சேர்ந்த பி. டி. எமலியானு திருட்டுத்தனமாகத் தயாரிக்கப்பட்ட 14 போத்தல் சாராயத்தை மகாசித்தை யென்னுங் கிராமத்திலிருந்து விறகேற்றின கரத்தையொன்றிலேற்றிச் சென்றதாகக் குற்றஞ்சாட்டத் தொடரப்பட்ட வழக்கு கம்பஹாப் பொலீஸ் கோட்டில் விசாரணைக்கெடுத்துக் கொள்ளப்பட்டது.

நீதிபதி எதிரியைக் குற்றவாளியெனக் கண்டு ரூபா100 அபராதம் விதித்தார்.

புதன்கிழமை இரவு 8 மணியளவில் சாராயம் ஏற்றிச் சென்ற வண்டி கண்டுபிடிக்கப்பட்டது.

சாராயத்தை வைத்திருந்ததாகவும் ஏற்றிச் சென்றதாகவும் ஜாயெல மதுபரிபாலன திணைக்களத்தைச் சேர்ந்த இன்ஸ்பெக்டர் எச். வி. விசமரசிங்கா எதிரிமீது வழக்குத் தொடர்ந்தார்.

எதிரி தமது குற்றத்தை ஒப்புக்கொண்டார். அவரது வழக்கறிஞர் நீதிஸ்தலத்தாருக்குத் தெரிவித்ததாவது:-

எதிரி ஒரு கரத்தைக்காரர். குறித்த தினத்தன்று விறகேற்றப்பட்டிருந்த தமது கரத்தையில் அவர் வந்தார். விறகின் சொந்தக்காரர் எதிரிக்குத் தெரியாமல் சாராயப் போத்தல்களைக் கரத்தையில் வைத்திருந்தார். மதுபரிபாலன அதிகாரிகள் வந்ததும், விறகின் சொந்தக்காரர் அங்கிருந்து சென்று விட்டார்.

நெல், தானியச் சட்டங்கள் நீக்கம்

மார்ச் மாதம் 9-ந் திகதியிலிருந்து நடைமுறையிலிருந்து வந்த (நெல், தானிய வகைகளை வாங்கி [illegible]) பாதுகாப்புச் சட்டங்கள் நீக்கப்பட்டு விட்டன.

இக்கட்டளைக்கையின் பலனாக அதிகாரம்பெற்ற அரசாங்க அதிகாரியல்லாத மற்ற எவருக்கும் 5 புசல் நெல்லுக்கு மேற்பட அல்லது 2½ புசல் தானியத்திற்கு மேற்பட விற்பனை செய்யக் கூடாதென்னுந் தடை நீக்கப்படுகிறது.

நெல் அல்லது தானியத்தை நிர்ணயிக்கப்பட்ட ஆகக் கூடுதலான விலைக்குக் குறைவாகவும் விற்கவோ அல்லது வாங்கவோ கூடாதென்று குறித்த பாதுகாப்புச் சட்டம் தடைசெய்திருந்தது.

புதிய ஜே. பிக்கு வரவேற்பு

கொழும்பு மாநகர் சென்ற சமத அரசப் பெருமானது ஜனனதினக் கொண்டாட்டத்தன்று மகா உத்தம தேசாதிபதி அவர்களால் (J. P.) சமாதான நீதவான் பட்டம் பெற்ற திரு. V. வீரசிங்கம் அவர்கள் யாழ்ப்பாணத்திற்குச் சென்ற ஞாயிற்றுக்கிழமை காலை 7 மணிபோல வந்து சேர்ந்தார். அவர்வரவை எதிர் பார்த்திருந்த பல பிரமுகர்கள் அவருக்குப் பூமாலை சூட்டிப் பல ஆசி மொழிகள் கூறி மோட்டார் இரதத்திலேற்றிச் செய்து இவ்வூர் நோக்கி வந்தனர். ஆனைக்கோட்டையை அணுகுதலும் அங்கு குழுமி நின்ற திரு. சின்னையா மணியகாரனும் அவர் உபதலைமைக்காரரும் பாடசாலை மாணவர்களும் உபாத்தியாயர்களும் பெருந்தொகையான ஊரவர்களும் இவரை மோட்டார் இரதத்தினின்றிறக்கி வெள்ளை முப்பரி பூட்டிய வாகனத்தமர்த்தி மணியமவர்களால் மாலை சூட்டிப் பல வாழ்த்துகள் கூறியபின் மேளவாத்திய சகிதமாய் ஊர்வலம் வந்தனர். வரும் வழியில் பூரணகும்பம் பன்னீர் சந்தனம் மாலைகளுடன் ஆயத்தமாயிருந்தோர் இவர்க்கு மாலையிட்டுப் பன்னீர் தெளித்து ஆசீர்வதிக்கப் பல நூற்றுக் கணக்கான மாலைகளுடன் பகல் 11 மணியளவில் [illegible] வந்து சேர்ந்தனர். அவருடன் அங்கு வந்த பல நூற்றுக்கணக்கான சுற்றமித்திரர்களும் சிற்றுண்டி குளிர்பானம் வெற்றிலை பாக்கு கலந்த பின் இவரது குணாதிசயங்களைப் பற்றி Dr. ஜெகநமையாவும், வித்தியாதரிசி திரு. குணசேகரமும், திரு. ஆனல்டு அவர்களும் பேசியபின், திரு. வீரசிங்கம் எழுந்து தான் இவ்வித பட்டத்தை எதிர் பார்த்தவனுமல்லன். இப்பெருந் தொகையான பிரமுகர்கள் இங்கு வந்து இவ்விதமாய்த் தன்னைச் சன்மானிப்பார்களென நினைத்தவனுமல்லன் என்றும் இவையெல்லாம் இவன் செயலென்றும் கூறி அங்கு வந்தோர்க்கு வந்தனமும் கூறி முடித்தனர். சந்தோஷத்தின பின் சந்தனம் பன்னீர் வழங்கிய பின் எல்லோரும் தத்தம் வீடுகள் சென்றனர்.

—கடித.

ஸேர். கிரிப்ஸ் மீண்டும் இந்தியா வருவாரா?

ராஜாஜியின் பதில்

சென்னை ஜூன், 11—

"ஹிந்து-முஸ்லிம் சமரஸமேற்பட்டாலுங்கூட ஸர். கிரிப்ஸ் மீண்டும் இங்கு வரப்போகிறாரா? ஏன் வீண்முயற்சி? என்று சிலர் என்னைக் கேட்கிறார்கள். ஸர். கிரிப்ஸ் திரும்பவும் வருவாரா இல்லையா என்பது பிரச்னையல்ல; நம்மில் ஒற்றுமையேற்பட்டு நம் சக்தி அதிகரிப்பதே முக்கியம். அப்படியதிகரித்து ஜப்பானையெதிர்க்க நம் உதவி கிடைக்குமென்று தெரிந்தால் தானே பிரிட்டிஷ் அரசாங்கம் வேறொரு தூதரையனுப்புவர்" என்று ராஜாஜி நேற்றுமாலை மயிலாப்பூர் மீர்சாகிப்பேட்டையில் சென்னை மத்திய வாலிபர்சங்கத்தின் ஆதரவில் செய்த பிரசங்கத்தில் குறிப்பிட்டார். ஸ்ரீமான். பி. நடேச முதலியார் தலைமை வகித்தார்.

ஸ்ரீ ஸி. ராஜகோபாலாச்சாரியார் மேலும் பேசியதாவது:- என் யோசனையை நன்றாக ஆராயாமலே கோபமாகப் பலர் பேசுகிறார்கள். முன்னர் கோயமுத்தூரில் குழாய் அமைப்பதென்ற பேச்சு ஏற்பட்டதும், அதிக வரிபோடுவார்களோ என்ற பயத்தால் குழாயின் நன்மை தெரியாமல் பலர் எதிர்த்தனர். ஆனால் பின்னர் குழாய் வந்துவிட்டது; கிளர்ச்சியும் மறைந்தது. அதுபோல் ஹிந்து—முஸ்லிம் சமரஸமேற்பட்டுப்போனால் இப்போது என்மீது கோபப்படுவோர்கள் சரியாப் பட்டுப்போய்விடுவார்கள்.

துவேஷத்தைக் குறைக்கவே என் முயற்சி

ஹிந்து—முஸ்லிம் ஒற்றுமையாவது; இப்போது ஏற்படவாவது; வீண்முயற்சியென்று சிலர் நினைக்கிறனர். இடைவிடாமல் நினைத்துக்கொண்டிருந்தால் ஒருநாளும் சமரஸமேற்படாது; இரு கக்ஷிகளிடையே கோபமும் வளர்ந்துகொண்டே போகும். ஒருவர் மற்றவன்தான் தவறு என்று கூறிக்கொண்டேயிருந்தால் பிரச்னை தீருவது எப்படி? சமரஸத்துக்கு ஏதோ ஒருமுறை கண்டால் அதையொப்புக்கொள்ள வேண்டும். அப்படியானால்தான் பிரிட்டிஷ் ஆதிக்கத்திலிருந்து நமக்கு விமோசனம் கிடைக்கும்.

இந்தச் சமரஸத்துக்கு இப்பொழுதென்ன அவசரமென்று கேட்கிறார்கள். நிலைமை நெருக்கடியாயிருப்பதால்தான் அவசரம். ஜப்பானிய ஆபத்து இப்போது மறைந்துவிட்டது; ஜப்பான்காரன் அமெரிக்கா அல்லது ஆஸ்திரேலியா, அல்லது சீனாவுடன் போர்செய்வது பற்றி யோசித்துக்கொண்டிருக்கையில் நமக்கென்ன அபாயம் என நினைப்பது பிசகு. அபாயம் ஒரேயடியாக மறைவதானாலுஞ்சரி. அப்படியல்ல; அபாயம் கொஞ்சம் வரப்போயிருக்கிறதேயொழிய இராமலேயாகிவிடவில்லை.

உத்தியோக ஆசையில்லை

உத்தியோகம் வேண்டுமென்ற ஆசையால் நான் என் யோசனையைத் தெரிவிக்கவில்லை. உத்தியோகத்திற்கு இது அபாயமானகாலம். ஜனங்களின் நன்மையையேத்துச் சொல்லி விலைவாசிக் கட்டுப்பாடு முதலிய நல்ல காரியங்களைச் செய்யச் சுயஆட்சிபோலுண்டா? வெளிநாட்டினர் ஆட்சி புரிவதால்தான் அம்பா சமுத்திரத்தில் நடந்தது போன்ற உணவுக் கலவரங்கள் ஏற்படுகின்றன. சுய ஆட்சியிருந்தால் இதற்கிடமிராது.

ராயபுரத்தில் எதிர்ப்புக் கூட்டம்

சென்னை, ஜூன், 11—

சென்னை முதல் வார்க்கின் காங்கிரஸ் கமிட்டியின் ஆதரவில் நேற்று மாலை ராயபுரத்தில் நடந்த ஒரு பொதுக்கூட்டத்தில் ஸ்ரீமான்கள். ஸி. என். முத்துரங்க முதலியார் எம். பக்தவத்ஸலம், என். கன்னியப்பன் முதலியோர் பேசினர். "இந்தியாவில் மூன்றாமவர் இருக்கையில் உண்மையான ஒற்றுமை ஏற்படாது. பாகிஸ்தானை ஒப்புக்கொள்வதின இந்தியாவைத் துண்டு போடுவதைத்தவிர வேறு ஒன்றும் ஏற்படாது. இதற்குக் காங்கிரஸ்காரர்களில் சிலர்தான் ஆதரவு காட்டியிருக்கின்றனர். ஆசார்ய கிருபாலினியின் சுற்றறிக்கைப் பிரகாரம் நிர்வாகப்பதவியிலுள்ள காங்கிரஸ்காரர்களில் சிலர்தான் ஸி. ஆர். திட்டத்தை ஆதரித்துத் தங்கள் பதவிகளை ராஜிநாமாச்செய்திருக்கின்றனர். ஸ்ரீ ஸி. ஆர். பிரசாரம் மக்கள் மனதில் கலவரத்தைத்தான் உண்டுபண்ணுகிறது'. என்ற அபிப்பிராயங்கள் கூட்டத்தில் தெரிவிக்கப்பட்டன. ஸ்ரீமான். தளவாய் கூட்டத்திற்குத் தலைமை வகித்தார். ஸ்ரீமான் வேங்கோபராவ், திருவேங்கடம், வரதராஜலு ஆகியோரும் பேசினர்.

நேசதேசக் கொடி வணக்கத் தினம்

கொழும்பிற் குதூகலமாகக் கொண்டாடப் பட்டது

மிஸ்றர். சர்ச்சிலின் விசேஷ செய்தி

ஐக்கியதேசத் தினத்தையொட்டிப் பிருத்தானிய பிரதமமந்திரி மிஸ்றர் சர்ச்சில் ஐக்கிய தேச மக்களுக்குப் பின்வருஞ் செய்தியை அனுப்பியிருக்கிறார்.

வெற்றிபெறும்வரை பரஸ்பரம் ஆதரவு அளிப்பதோடு உதவி செய்வோமென்றும் நாம் இத்தினத்தில் உறுதிகூறுகின்றோம். மனிதவர்க்கத்தின்பேரிலுள்ள விசேஷ அநுதாபத்தால் தூண்டப்பட்டவர்களாய் மனிதவர்க்கத்தின் க்ஷேமத்திற்குப் பொதுவாயுள்ள லக்ஷியத்தை விசால நோக்கத்தோடு உணர்ந்திருக்கின்றோம். இத்தகைய உணர்ச்சியின்றி நேசதேசங்களின் இப்போதைய பிரயாசையால் அதன் பூரணபலனை அடையமுடியாது.

"நமது அன்பர் ஜனாதிபதி ரூஸ்வெல்ட் ஐக்கிய அமெரிக்க மக்களுக்கு அனுப்பியிருக்கும் செய்தியில் யூன்மாசம் 14-ந் தேதியன்று அமெரிக்க சுதந்திரம்," பலம், ஐக்கியம் ஆகிய இவைகளின் சின்னமாக அவர்களின் கொடியைக் கௌரவிக்கும் வழக்கம் பல வருடங்களாக இருந்து வருவதை அவர்களுக்கு நினைவூட்டுகிறார்.

அமெரிக்க மக்கள் மாத்திரம் இப்போரில் ஈடுபட்டிருக்கவில்லை. ஐக்கியதேசங்களோடு தோளோடு தோள் நின்று போர்புரிந்து வருகிறார்களென்று மிஸ்றர் ரூஸ்வெல்ட் தனது மக்களுக்கு அறிவிக்கிறார். அமெரிக்க மக்கள் தங்கள் கொடியோடு மற்ற நேசதேசங்களின் கொடிகளைக் கௌரவிப்பதன்மூலம் அவர்கள் அத்தேசத்தினர்களையும் கௌரவித்தவர்களாவார்களென்று மிஸ்றர் ரூஸ்வெல்ட் கூறியிருக்கிறார். இன்று பின்வரும்தேசங்களின் மக்கள் கௌரவிக்கப்படுகிறார்கள்:-

பிரிட்டன், ஐக்கிய அமெரிக்கா, சோவியத்ருஷியா, சீனு, அவுஸ்திரேலியா, பெல்ஜியம், கனடா, காஸ்டாரிகா, கியூபா, செக்கோஸ்லவக்கியா, டொமினிகன் குடியரசு, எல் சால்விடார், சுதந்திரப்பிரான்ஸ், கிரீஸ் காட்டமாலா, ஹைடி ஹொண்டாரஸ், இந்தியா, லக்ஸம்பர்க மெக்ஸிகோ, ஹொலந்து, நியூஸிலந்து, நிகாரகுவா, நோர்வே, பனமா, போலந்து, தென்னுபிரிக்கா, யூகோஸ்லேவியா ஐக்கிய தேசங்களின் படைகளைக் கௌரவிப்பதில் நானும் மிஸ்டர் ரூஸ்வெல்டோடு கலந்து கொள்ளுகிறேன். இப்போரில் வீழ்ந்தவர்களையும் இப்பொழுது போர்புரிந்து வருபவர்களின தைரியத்தையும் ஊக்கத்தையும் நாம் பாராட்டுவோமாக. ஆக்கிரமிக்கப்பட்டு ஒடுக்கப்படும் நாடுகளில் சுதந்திரத்திற்காகப் பாடுபடும் ஒவ்வொருவரையும் நாம் இன்று நினைப்போமாக.

கொழும்பிற் கொண்டாட்டம்

யூன், 15

சுதந்திரத்திற்காக நடைபெறும் இப்போரிற் பங்கெடுத்துக்கொண்டிருக்கும் நேசதேசங்களின் கொடிகளைக் கௌரவிப்பதில் இலங்கையும் மற்ற நேசதேசங்களோடு நேற்றுக் கலந்துகொண்டது.

நேசப்படைகளின் அணிவகுப்பும் தெருப்பவனியும் நேற்றுக் கொழும்பில நடைபெற்றது. இக்காட்சியைக் காணப் பொதுமக்கள் ஏராளமாகக் கூடியிருந்தனர்.

ஆகாய, தரை, கடற்படைகளின் வீரர்கள் நேற்றுக்காலை 10½மணிக்கு காலிமுகப் பார்க்கிற் கூடினர். அதற்கு அரைமணி கழித்துப் பவனி ஆரம்பமாயிற்று. பவனி ராணிவீதி, குமாரவீதி, மெயின்ஸ்ட்ரீட், லேட்டன்தெரு வழியாகச் சென்றது.

இராணி மாளிகைக்கு வெளிப்புறத்தில வாசலுக்கு அருகில் இராணுவ வணக்கம் நடைபெற்றது. சேனுபதி, தேசாதிபதி, டச்சு கடற்படையைச்சேர்ந்த வைஸ்அட்மிரல் ஹெல்பிரிச், அமெரிக்க கடற்படையைச் சேர்ந்த காப்டன் லம்மோன்ஸ் முதலியவர்கள் இராணுவ வணக்கத்தை ஏற்றுக்கொண்டார்.

இராணுவ வணக்க மேடைக்கு இருபுறத்திலும் நேசதேசங்களின கொடிகள் வைக்கப்பட்டிருந்தன. ஒவ்வொரு கொடிக்கருகிலும் ஒரு கடற்படைக் காவலாளி இருந்தார். கீழ்க்காணும் தேசங்களின கொடிகள் அங்கு பறக்கவிடப்பட்டிருந்தன. பிருத்தானிய ஏகாதிபத்திய நாடுகள், சோவியத் ருஷியா, ஹொலந்து, சுதந்திரபிரான்ஸ், சீனு, நோர்வே பெல்ஜியம், போலந்து கிரீஸ், யூகோஸ்லேவியா, மெக்ஸிகோ செக்கோஸிலவக்கியா லக்ஸம்பர்க் முதலிய தேசங்கள்.

மக்களின் ஆரவாரம்

பவனியை பிரிகேடியர் ஜே. ஓ. தர்பின் என்பவர் தலைமை வகித்து நடத்தினர். அதன்பிறகு அவர் இராணுவ வணக்க மேடைக்குச் சென்றார்.

பவனி இராணுவ வணக்கமேடையை 11¾ மணிக்கு அடைந்தது. வழிமுழுவதும், ஏராளமான மக்கள் கூடியிருந்து ஆரவாரஞ் செய்தனர்.

பவனி முடிந்தவுடன் மக்கள் தங்கள் தங்கள் இடங்களுக்குத் திரும்பும்போது ஆகாயத்தில் விமானங்கள் வட்டமிடுவதைக் கண்டனர். விமானப்பவனி ஒன்று நடைபெற்றது மூன்று விமானங்கள் கொண்ட கோஷ்டிகளாக விமானங்கள் சென்றன.

இவ்வைபவம் ஏறக்குறைய ஒரு மணி நேரம் நடைபெற்றது.

யப்பானியர் இந்தியாவைத் தாக்கினுல்?

சாத்விக முறையில் எவ்வாறு எதிர்ப்பது என்பது பற்றிக் காந்திஜி விளக்கம்

பம்பாய் ஜூன் 14—

ஜப்பானியர் இந்தியாவுக்கு வருவார்களேயானுல், அவர்களைச் சாத்விக முறையில் எவ்வாறு எதிர்ப்பதென்றும் நாம் யப்பானியர் கையிற் சிக்கிக் கொண்டால் எவ்வாறு நடந்து கொள்ள வேண்டுமென்றும் ஒரு நிருபர் கேட்டனுப்பிய கேள்விக்கு 'ஹரிஜனில்' பதிலளிக்கையில் மகாத்மா காந்தி பின்வருமாறு எழுதுகிறார்:-

ஜப்பானியர் இங்கு வருவார்களேயானுல், அவர்களுக்கு ஆதாரமோ மறைவிடமோ கொடுக்க கூடாது. அவர்களைத் நாம் விரும்பவில்லையென்பதை அவர்களுக்கு நன்கு உணர்த்த வேண்டும். இக்காரியங்கள் நாம் நினைப்பதுபோல அவ்வளவு லேசாக நடைபெறாது. அவர்கள் நம்முடைய சிநேகிதர்கள் என்ற முறையில் இங்கு வருவார்களெனவும நாம நினைப்பது தவறு படையெடுப்பவர் யாரும் இம்மாதிரி இருந்ததில்லை. ஜனங்களிடையே குழப்பத்தை உண்டாக்கி அவர்களிடமிருந்து வலுவில தங்கள் தேவைகளைப் பூர்த்தி செய்து கொள்வார்கள்.

படையெடுப்பை எதிர்க்க முடியாத ஜனங்கள சத்துருவிற்குச் சேவை செய்யக் கட்டாயப் படுத்தப்படுவதைத் தவிர்க்க அவ்விடங்களிலிருந்து வெளியேறி விடவேண்டும்.

துரதிர்ஷ்டவசமாக ஜப்பானியர் வசம் சிலர் அகப்படுவார்களேயானுல், அவர்கள் கட்டாயச் சேவை செய்ய வற்புறுத்தப்படுவார்கள். சேவை செய்ய மறுத்தால் உடனே சுட்டுக் கொல்லப்படுவார்கள். இம்மாதிரியான தியாகத்தை மக்கள் செய்வார்களேயானுல், தங்கள் கௌரவத்தையும் தங்கள் நாட்டின் கௌரவத்தையுங் காப்பாற்றியவர்களாவார்கள். இதற்குப் பதிலாகச் சத்துருவை பலாத்காரத்தைக் கொண்டு எதிர்ப்பார்களேயானுல் சில ஜப்பானியர்களைக் கொன்று அதன்மூலம் கடுமையான சத்துருவின் பதில் நடவடிக்கைகளை எதிர்கொண்டழைப்பதாகும்.

மக்கள் சத்துருவிடம் உயிருடன் அகப்பட்டுக் கொண்டால் கடுஞ் சோதனைகளுக்கு ஆளாக வேண்டியிருக்கும். சத்துருவை எதிர்க்கும் சமயம் நீங்கள் இறந்து அவமானத்திலிருந்து தப்பிவிடலாம். கடுஞ் சோதனைகளுக்கு ஆளாகாமல் இருக்க ஒருவர் மரணம் அடைவதே மேலானது என்று சொல்லப்படுகிறது.

பாதுகாப்புச் சட்ட வழக்குத் தோல்வி

"கட்டுரை சத்துருவுக்கு உபயோகமற்றது"

"சிலோன் டெய்லி நியூஸ்" பத்திரிகையைச் சேர்ந்த மிஸ்றர். ஆர். ஏ. டி. அல்விஸ் தாமறிந்த தகவலையோ அல்லது தம்மிடமிருந்த பத்திரங்களையோ சமர்ப்பிக்கும்படி அதிகாரம் பெற்ற அதிகாரியொருவர் கோரிய பொழுது அப்படிச் செய்யத் தவறியதாகப் பாதுகாப்புச் சட்டத்தின்கீழ்த் தொடரப்பட்ட வழக்கில் தற்காலிக கொழும்பு நீதிபதி சென்ற திங்கட்கிழமை தீர்ப்புக் கூறினர்.

சென்ற ஏப்ரல்மீ 23-ந் திகதி வெளிவந்த "சிலோன் டெய்லி நியூஸ்" பத்திரிகையில் "இலங்கையின் பாதுகாப்புச் செலவு" என்ற கட்டுரையை எழுதுவதற்கு மிஸ்றர். டி. அல்விஸ் உபயோகித்ததும் தம்மிட முள்ளதுமான தகவல் அல்லது பத்திரங்களைச் சென்ற மே மாதம் 12-ந் திகதி அல்லது அதற்கு முன்னர்ச் சமர்ப்பிக்கும்படி பொக்கிஷக் காரியதரிசி மிஸ்றர். எச். ஜே. ஹக்ஸாம் கேட்டுக் கொண்ட பொழுது மிஸ்றர். டி. அல்விஸ் அவ்வாறு செய்யத் தவறியதாக இவ்வழக்கிற் குற்றஞ் சாட்டப்பட்டது.

சம்பந்தப்பட்ட கட்டுரையில் சத்துருவுக்கு உபயோகமான விஷயமெதுவும் வெளியாகவில்லையென்று நீதிபதி தீர்மானித்து எதிரியை நிரபராதி யெனக் கண்டு விடுதலை செய்தார்.

தீர்ப்பளிக்கும்போது, நீதிபதி குறிப்பிட்டதாவது:—

"எதிரியின கட்டுரை இலங்கையின்பாதுகாப்புக்கு எவ்வித இடைஞ்சலும் உண்டு பண்ணக்கூடியதல்லவென்று நான் உணருகிறேன். யுத்தத்தைச் சிறந்த முறையில் நடத்துவதற்கும் எள்ளளவேனும் அது பாதகத்தை யுண்டுபண்ணமாட்டாதென்றும் நான் திருப்திப்படுகிறேன்."

நுவரெலியாவின் நகரசபைப் பிரச்னை

மகாநாட்டில் மந்திரியின் ஆலோசனை

நுவரெலியா ஜூன 14

நுவரெலியாப் பட்டினசபைக்குப் பதிலாக ஒரு நகரசபையை ஏற்படுத்துவது பற்றிப் பொது மக்களின நோக்கத்தை அறியும் பொருட்டு ஸ்தல ஸ்தாபன மந்திரி மிஸ்றர். எஸ. டப்ளியூ ஆர். டி. பண்டாரநாயக பட்டினசபை மண்டபத்தில் ஒரு பொது மகாநாட்டைக் கூட்டினர்.

மகாநாட்டில திட்டமாக எவ்வித தீர்மானமும் செய்யப்படவில்லை. பட்டினசபையை நகரசபையாக மாற்றும பிரச்னையை நிர்வாகசபை மீண்டும் ஆலோசிக்குமுன், நகரசபை சட்ட அமைப்பைக்கோரி முந்திய பட்டினசபை நிறைவேற்றியிருந்த தீர்மானத்தை நீக்க அல்லது மாற்றிக் கொள்ள வேண்டுமென்ற ஆலோசனையை மந்திரியோடு பரிசீலனை செய்தபின, சபை நிராகரித்தது.

ஸ்தல ஸ்தாபனக் கொம்மிஷனர் மிஸ்றர். ஈ. டப்ளியூ. கண்ணங்கரா இரு மகாநாடுகளிலும் கலந்து கொண்டார். நிருவாகசபையின அங்கத்தவரில திருவாளர்கள் எஸ். சமரக்கொடியும் ஜே. குருப்புவுமே விஜயம் செய்தனர்.

பொது மகாநாட்டில் பட்டினசபையின் ஒரு பகுதி அதாவது கெலகலையைச் சேர்ந்தவர்களே பெரும்பான்மையாக வந்திருந்தனர். இப்பிரிவைச் சேர்ந்த வரிகொடுப்போரிற் பலர் நுவரெலியாவில் எவ்வித மாறுதலையு மேற்படுத்துவதைப் பலமாக ஆக்ஷேபித்தனர். சுத்தமானதும் சுகாதாரத்திற் கேற்றதுமான நகரில் எவ்வித மாறுதலையு மேற்படுத்தக் காரணமில்லையென்று அவர்கள் தர்க்கித்தனர்.

நுவரெலியா இலங்கைக்கு ஒரு சுக வாசஸ்தலமாக இருப்பதால வருடா வருடம் விசேஷ மானியமொன்றை அரசாங்கம் நகருக்கு உதவ வேண்டுமென்று தலைவர் மிஸ்றர். ஜே. ஜே. கலகரத்தினம அபிப்பிராயம் தெரிவித்தார். இக்காரணத்தை முன்னிட்டு நுவரெலியாவுக்குப் பணவுதவிபெற உரிமையில்லையென்று மந்திரி தெரிவித்தார். எனினும், நுவரெலியாவின விசேஷ சந்தர்ப்பங்களைப் பற்றித் தாம் அநுதாபத்துடன் கவனிப்பதாக அவர் குறிப்பிட்டார்.

புதுடில்லியிற கிளஸ்டர் கோமகன்

கராச்சியிற் பிரதான படைத்தளங்களைப் பார்வையிட்டார்

புதுடில்லி, ஜூன், 13 —

கிளஸ்டர் கோமகன் புதுடில்லிக்கு நேற்றுப் பிற்பகல் 3-55 மணிக்கு வந்து சேர்ந்தார்.

அவர் காக்கி உடைகளணிந்து கொண்டு படிக் கட்டுகள் வழியாக மெதுவாக இறங்கும்போது வைஸ்ராய் அக்கோமகனைச் சந்தித்து அவரோடு கை குலுக்கினர்.

வரும் வழியிலேற்பட்ட கடும் புயல், கண்ணை மறைக்கும் தூசிக் காற்று ஆகிய இவைகளினுல் விமானம் 3 மணி நேரம் தாமதித்து வந்தது. நேற்றுக் கோமகன் வைஸ்ராய் மாளிகையில் தங்கினர். கராச்சியில் அநேக இடங்களுக்குச் சென்று பார்வை யிட்டதாலும் புதுடில்லிக்கு விஜயஞ் செய்ய நீண்ட தூர விமானப் பிரயாணஞ் செய்ததாலும் ஓய்வெடுத்துக் கொண்டார்.

இந்தியா விஜயத்தின் நோக்கம்

முன்னுல் வந்த செய்தியொன்று கூறுவதாவது:-

லெப்டினண்ட் ஜெனறல் கிளஸ்டர் கோமகன் இந்தியா வந்து சேர்ந்தார். சிந்து கவர்னர் வைஸ்ராயின் இராணுவக் காரியதரிசி இந்திய சேனுதிபதி சார்பாக உதவிச் சேனுதிபதி ஜெனறல் ஸேர். அலன்ஹார்ட்லி ஆகியோரும் அவரை வரவேற்றுர்கள். இந்தியாவில் வைத்து நேர்முகமாக இந்தியத் துருப்புகளையும் இந்திய மகாசனங்களையும் சமஸ்தானுதிபதிகளையும் பாராட்டுவதற்கு அரச சக்கரவர்த்திக்குச் சந்தர்ப்பம் கிடைக்காததால் அவரது கட்டளைக்கிணங்க அவரது சகோதரர் இப்பொழுது இங்கு விஜயஞ் செய்திருக்கிறுர்.

கிளஸ்டர் கோமகன் கெய்ரோவிலிருந்து விமான மார்க்கமாக கராச்சிக்கு வந்து சேர்ந்ததாக மத்தியக் கிழக்குப் பிராந்தியத்திற் போர்புரியும் இந்தியத் துருப்புகளைப் பார்வை யிட்டிருக்கிறுர்.

விமானத் தாக்குதற் பாதுகாப்பு ஏற்பாடுகள் நகரக் காவற்படைகள் போன்றவைகளையும் இந்திய யுத்த முயற்சிகளையுங் கூடுமான அளவு அதிகமாகப் பார்க்க அவர் உத்தேசித்திருக்கிறுர்.

இங்கிலாந்திற் பல பிரதான சங்கங்களுக்குத் தலைவராக இருக்கிறுர். வெளிநாடுகளில் பல பிரதான சம்பவங்களுக்கு அரச சக்கரவர்த்தியின் பிரதிநிதியாகச் சென்றிருக்கிறுர்.

கிளஸ்டர் கோமகன் இராணுவத்திற் சேவை செய்திருக்கிறுர். 1937-ம் வருடத்தில் அவர் மேஜர் ஜெனறலாக நியமிக்கப்பட்டார். 1941-ம் ஆண்டில் அவர் லெப்டினண்ட் ஜெனறல் பதவிக்கு உயர்த்தப்பட்டார்.

அமெரிக்க தளத்திற்கு விஜயம்

கராச்சிச் செய்தி யொன்று கூறுவதாவது:-

கிளஸ்டர் கோமகன் கராச்சியைச் சுற்றிப் பார்க்கும்போது அமெரிக்க படை ஸ்தலங்களுக்கும் விஜயஞ் செய்தார். அங்கு அமெரிக்க விமானங்களைப் பார்வையிட்டார்.

கராச்சியைப் பார்வையிட்டு முடிந்தவுடன் கிளஸ்டர் கோமகன் சிந்துக் கவர்னருக்குப் பின்வருஞ் செய்தியை அனுப்பியிருக்கிறுர். விமானப்படை, கடற்படை, இராணுவம் முதலியவைகளில் உள்ளவர்களின் திறமையையும் தைரியத்தையுங் கண்டு மிகவும் பரவசமானேன். சிவில் பாதுகாப்புப் படையினர் அணிவகுப்பைப் பார்த்தேன். தங்கள் கடமைகளைச் சரிவரச் செய்வதில் அவர்களுக்கு இருக்கும் உற்சாகத்தைப் பாராட்டுகிறேன்.

உருளைக் கிழங்கு வெங்காயம் விலைகள் கட்டுப்பாடு

விலைக் கட்டுப்பாட்டு அதிகாரி உருளைக்கிழங்கு வெங்காயம் ஆகியவற்றின் ஆகக்கூடுதலான விலைகளை நிர்ணயித்து விடுத்த விலைக்கட்டுப்பாட்டு உத்தரவு கஸெற்றில் வெளிவந்திருக்கிறது குறித்த ஆகக் கூடுதலான விலைவிவரம் பின் வருமாறு:-

இந்தியா உருளைக்கிழங்கு: மொத்த விலை அந்தர் ஒன்றுக்கு ருபா 14, சில்லறை விலை ருத்தலொன்றுக்கு சதம் 16

பம்பாய் வெங்காயம், மொத்தவிலை அந்தர் ஒன்றுக்கு ருபா 15. சில்லறை விலை ருத்தலொன்றுக்கு சதம் 17.

சிவப்பு வெங்காயம்: மொத்தவிலை அந்தர் ஒன்றுக்கு ருபா 14, சில்லறை விலை ருத்தலொன்றுக்கு சதம்16.

நாட்டியத்திற்கு அதிக ஸ்திரீகள்

துருப்புகளுக்குப்பொழுது போக்கு வசதிகள்

போர்வீரர் சேம ஆக்க நிர்வாக சபையின் வேண்டுகோள்

இப்பொழுது இலங்கையிலுள்ள துருப்புகளை உபசரிக்கும் விஷயத்திற் கஷ்டங்களேற்படுவதால் அவற்றைச் சமாளிப்பதற்கு உதவியளிக்கும் பொருட்டு விசேஷ முயற்சியெடுக்குமாறு போர்வீரர் சேம ஆக்க நிர்வாகசபை இலங்கை ஸ்திரீகளுக்கு ஒரு வேண்டுகோளை விடுத்திருக்கிறது.

இத் துருப்புகளுக்கு மிகப் பிரியமான பொழுது போக்குக் கேளிக்கைகளில் நாட்டியமு மொன்றுகும். இங்கிலாந்தில் இவர்கள் எங்கு சென்றபோதிலும் நாட்டிய வசதிகள் அவர்களுக்குக் கிடைத்தன.

இங்கிலாந்துக்குச் சென்றிருக்கும் இலங்கைச் சிறுவர் ஆங்கிலச் சிறுமிகளோடு நாட்டியஞ் செய்து குதூகலிக்கின்றனரென்று போர்வீரர் சேம ஆக்க நிர்வாகசபையைச் சேர்ந்த அதிகாரி ஒருவர் கூறினர். இலங்கைச் சிறுமிகளும் இலங்கை வந்திருக்கும் போர்வீரரை உபசரித்து மகிழ்ச்சியுறச் செய்வது அவர்கள் கடமையாகும் என்றும் அவர் குறிப்பிட்டார். சென்ற வெள்ளிக்கிழமை நிர்வாகசபை ஒழுங்கு செய்த நாட்டியத்தில் ஸ்திரீகள் மிகக் குறைவாக இருந்தனரென்று குறித்த உத்தியோகஸ்தர் குறிப்பிட்டு ஜூன் மீ 26-ந்திகதி நடைபெறவிருக்கும் நாட்டியத்திற்குக் குறைந்தபட்சம் 500 ஸ்திரீகள் விஜயஞ் செய்வரென்று தாம் நம்புவதாகவும் அவர் கூறினர்.

பந்தோபஸ்து வசதியும் வாகன வசதியும்

ஸ்திரீ கோஷ்டிகளை வீடுகளிலிருந்து நாட்டிய ஸ்தலத்திற்கு ஏற்றிச் செல்லவும் பின்னர் அவர்களை வீட்டுக் கழைத்துச் செல்லவும் வசதி செய்யப்படுமென நம்பப்படுகிறது. இவ்வசதிகளைப் பெற விருப்புபவர்களைக் களியாட்ட உபநிர்வாக சபைத் தலைவர் மிஸ்றர். எச். எச். நீடுக்கு எழுதும்படி கேட்டுக்கொள்ளப்படுகிறது. பெண்துணை தேவைப்படுகிறவர்களை மிஸ்றர். நீடுக்கு எழுதும்படி கேட்டுக்கொள்ளப்படுகின்றனர்.

நாட்டியத்தில் வெறிக்கும் குடிவகைகள் எதுவும் விற்பனை செய்யப்படமாட்டாவென்றும் குடிவகையை அதிகமாக உபயோகிப்பவர்கள் அங்கே அநுமதிக்கப்படமாட்டார்களென்றும் நிர்வாகசபை அதிகாரிகள் உறுதி கூறுகின்றனர். துருப்புகளும் ஒழுங்கான முறையில நடந்து கொள்ளுவரென்றும் உறுதி கூறப்படுகிறது.

இலங்கைப் பாதுகாப்புப் படைப் பிரிவிற் சேர்ந்திருக்கும் சிறுவர்களும் தம சகோதரிகளையும் சிநேகிதர்களையும் குறித்த வெள்ளிக்கிழமை நடைபெறவிருக்கும் நாட்டியத்திற்கு அழைத்துவருமாறு ஒரு விசேஷ வேண்டுகோள் விடப்பட்டிருக்கிறது. அன்றைய தினம் ஸ்திரீகள் யாவரும் மற்றும் அலுவல்களில் ஈடுபடாமல் நாட்டியத்திற்கு விஜயஞ் செய்து துருப்புகளுக்கு மகிழ்ச்சியை அளிக்குமாறு கோரப்படுகின்றனர்."

சர்வ கலாசாலைச் சட்டம்

ஜூலை முதற் திகதியிலிருந்து செயலிற் கையாளத் தேசாதிபதியின் உத்தரவு

இலங்கைச் சர்வகலாசாலைச் சட்டம் நடைக்கு வரவேண்டிய தினத்தை ஜூலை மாதம் முதல் திகதியாக மேன்மை தங்கியதேசாதிபதி நியமித்துச் சென்ற வெள்ளிக்கிழமை இரவு வெளிவந்த கஸெற்றில் ஒரு பிரகடனத்தை விடுத்திருக்கிறுர்.

மக்கள் உணவை மாற்றியமைத்துக் கொள்ள வேண்டியதேன்?

இலங்கையில் உணவுப் பொருள் நிலைமை பற்றி யுத்தசபையின் பரிசீலனை

குறைக்கப்பட்ட அரிசிக்குப் பதில் வேறு உணவுப் பொருட்கள்

யூன், 16

இலங்கை மக்களுக்கு உணவு கிடைக்காமற் போய்விடுமென்று பயப்படக் காரணமில்லாவிட்டாலும், அவர்களுக்குத் தங்கள் உணவை மாற்றியமைத்துக்கொள்ள வேண்டிய நிர்ப்பந்தமேற்பட்டிருப்பதாக நேற்றிரவு சேனுதிபதி ஸேர். ஜியாப்ரே லேட்டன் பத்திரிகைகளுக்கு வெளியிட்டிருக்கும் அறிக்கையிற் குறிப்பிட்டுள்ளார்.

அவ்வறிக்கை மேலும் கூறுவதாவது: இப்பொழுது உணவுப் பொருட்களைப் பற்றிய நிலைமையையும் மேற்கொண்டு கிடைக்கக்கூடிய உணவுப் பொருட்களைப்பற்றியும் இலங்கையுத்தசபை நன்கு ஆலோசித்தது.

உணவுப்பொருள்கள் கிடைக்கும் இடங்களையோ இறக்கப்படும் துறைமுகங்களையோ அல்லது நமக்குக்கிடைக்கும் உணவுப்பொருள்களின் அளவையோ தேசப் பாதுகாப்பின் காரணமாக வெளியிடுவது உசிதமல்ல. கடல் மார்க்கமாகவரும் எல்லா இறக்குமதிகளுக்கும் சத்துருவினுல் இடைஞ்சல் ஏற்படக்கூடுமாதலால் இறக்குமதிகளின் கப்பல்கள் செல்லும் பாதைகள் நேரம் இவைகளை இரகசியமாக வைத்திருக்கவேண்டியது மிகவும் அவசியம். நமது கப்பல்களும் கப்பலோட்டிகளும் நடக்கக்கூடிய கஷ்டங்களுக்கு உள்ளாகும்படி நாம் எதுவும் செய்யக்கூடாது.

இரண்டு உண்மைகள்

இப்படி இருந்தபோதிலும் கீழ்க்காணும் இரண்டு உண்மைகளை வெளியிட வேண்டியிருக்கிறது. முதலாவதாக இலங்கைமக்களுக்கு உணவு கிடைக்காமற் போய்விடுமென்று பயப்படச் சிறிதும் காரணமேயில்லை. இரண்டாவதாக, இலங்கைமக்களிற் பெரும்பாலோர் தங்கள் உணவை மாற்றி அமைத்துக் கொள்ளவேண்டிய அவசியம் ஏற்பட்டிருக்கிறது.

ஏனெனில், இந்தியாவிலும் சரி, மற்ற இடங்களிலும் சரி அரிசி, குறிப்பிட்ட காலங்களில்தான் கிடைக்கும். அதனுல், அறுவடைகளுக்கு நடுவே அரிசி 'சப்ளை' சிறிது தடைப்படும். அரிசி 'சப்ளை'த் தட்டுப்பாடு ஏற்படும் சமயம் இப்பொழுது இருந்துவரும் அரிசிக் கட்டுப்பாட்டின்கீழ் அரிசி விநியோகிக்க நம்மிடம் போதிய கையிருப்பு இல்லை.

இந்நிலையில் நாம் இரண்டு காரியங்களைச் செய்யலாம். அதாவது,

(1) இப்பொழுது இருந்துவரும் அரிசிக்கட்டுப்பாட்டுத் திட்டத்தைத் தொடர்ந்து நடத்திவிட்டு, அரிசி 'சப்ளை' தடைப்படும் காலத்தில் அரிசியே இல்லாமல் இருக்கலாம், அல்லது

(2) இப்பொழுது கொடுக்கப்படும் அரிசியைக் குறைத்து இதனுடு கோதுமை மா போன்ற சுலபமாகக் கிடைக்கக்கூடிய உணவுப் பொருள்களை உபயோகிக்கலாம்.

சிறந்த முறை

இரண்டாவதாகச் சொல்லப்படும் முறையே சிறந்ததென்று தோன்றுகிறது. ஏனெனில், திடீரென்று உணவை மாற்றுவதற்குப்பதிலாக, மெதுவாக உணவை மாற்றி அமைத்துக் கொள்ள இதனுல் முடிகிறது. நம்நாட்டில் பயிராகும் உணவுப் பொருள்கள் இதனுல் செலவாகும்.

அரிசியைக்குறைத்துக்கொண்டு அதற்குப் பதிலாகத் தானியவகைகளைத் தங்கள் உணவில் அதிகமாகச் சேர்த்துக் கொள்ளவேண்டும். தங்கள் உணவில் அரிசியைத் தவிர மற்றப்பொருள்களையும் உபயோகித்து வருபவர்கள் அரிசியை அடியோடு நிறுத்திவிடவேண்டும். அப்படிப்பட்டவர்களுக்கு அரிசி அவ்வளவு பிரதானமல்ல.

திருச்சி ரேடியோ நிகழ்ச்சி

(396 மீ)

(† இசைத்தட்டு)

வியாழன் ஜூன் 18

காலை 7-15 கீதாரம்பம் 7-30 வானெலி வாத்ய கோஷ்டி 7-40 கீத சித்திரம் † 8-00 ஆங்கிலத்தில் செய்திகள் 8-10 நந்த குமார் † 8-20 மன்னுர்குடி நாகநாத ஐயர் 9-00 ஒலிபரப்பு முடிவு.

1-00 இசைக் கதம்பம் † 1-30 ஆங்கிலத்தில் செய்திகள் 1-35 மன்னுர்குடி நாகநாத ஐயர் 2-00 தமிழில் செய்திகள் 2-05 கோடைக் கல்வி 2-30 ஒலிபரப்பு முடிவு.

மாலை 5-00 எம். ஆர். வாசவாம்பாள் 5-45 இசைப் பயிற்சி 6-00 ஆங்கிலத்தில் செய்திகள் 6-10 நடைமுதல் நிகழ்ச்சிகள் 6-15 கிராம நிகழ்ச்சிகள் 6-35 தமிழில் செய்திகள் 6-45 எம். ஆர். வாசவாம்பாள் 7-15 செய்திக் கடிதம் தமிழ் பி. பி. ஸி. அஞ்சல் 7-30 அறிவிப்புகள் 7-45 எம். கே. தியாகராச பாகவதர் பாட்டு கும்பகோணம் சிவவடிவேல் பிள்ளை வயலின் வாணாடி சுப்பிரமணிய பிள்ளை மிருதங்கம் 9-20 ஆங்கிலத்தில் செய்திகள் 9-30 லண்டன் அஞ்சல் 10-00 ஒலிபரப்பு முடிவு.

வெள்ளி ஜூன் 19

காலை 7-15 கீதாரம்பம் 7-20 தமிழில் செய்திகள் 7-30 வானெலி வாத்ய கோஷ்டி 7-40 படத்திலிருந்து † 8-00 ஆங்கிலத்தில் செய்திகள் 8-10 வயலின் † 8-20 காஞ்சிபுரம் ஜீ. சாரங்கபாணி செட்டியார் 9-00 ஒலிபரப்பு முடிவு.

1-00 திரைகானம் † 1-30 ஆங்கிலத்தில் செய்திகள் 1-35 காஞ்சிபுரம் ஜீ. சாரங்கபாணி செட்டியார் 2-00 தமிழில் செய்திகள் 2-05 கோடைக் கல்வி 2-30 ஒலிபரப்பு முடிவு.

மாலை 5.00 தஞ்சாவூர் பாலகிருஷ்ணபிள்ளை 5-40 குரான்-இ-ஷரீப் 6-00 ஆங்கிலத்தில் செய்திகள் 6-10 நடைமுதல் நிகழ்ச்சி ஆங்கிலம் 6-15 கிராம நிகழ்ச்சிகள் 6-35 தமிழில் செய்திகள் 6-45 திருவீழிமிழலை வி. மீனுக்ஷி சுந்தரம் பிள்ளை சகோதரர்கள் நாகஸ்வரம் 7-15 இலக்கிய வாசகம் 7-30 அறிவிப்புகள் 7-45 புதிய வெளியீடுகள் † 8-00 தஞ்சாவூர் கே. பாலகிருஷ்ண பிள்ளை 8-30 உலகவிவாரங்கள் பி. பி. ஸி. பேச்சு 8-45 திருவீழிமிழலை வி. மீனுக்ஷி சுந்தரம் பிள்ளை சகோதரர்கள் நாகஸ்வரம் 9-20 ஆங்கிலத்தில் செய்திகள் 9-30 லண்டன் அஞ்சல் 10-00 ஒலிபரப்பு முடிவு.

சனி ஜூன் 20

காலை 7-15 கீதாரம்பம் 7-20 தமிழில் செய்திகள் 7-30 வானெலி வாத்ய கோஷ்டி 7-40 டாக்கி மெட்டுகள் 8-00 ஆங்கிலத்தில் செய்திகள் 8-10 காலை கீதம் † 8-20 ஸி. எஸ். சக்ரபாணி 9-00 ஒலிபரப்பு முடிவு.

1-00 திரைகானம் † 1-30 ஆங்கிலத்தில் செய்திகள் 1-35 ஸி. எஸ். சக்ரபாணி வயலின் 2-00 தமிழில் செய்திகள் 2-05 ஐரோப்பிய சங்கீதம் † 2-30 ஒலிபரப்பு முடிவு.

மாலை 5-00 உமையாள்புரம் ஜீ. கல்யாணராம ஐயர் 5-40 திருமுருகாற்றுப்படை 5-50 பஜனை 6-00 ஆங்கிலத்தில் செய்திகள் 6-10 நடைமுதல் நிகழ்ச்சி 6-15 கிராம நிகழ்ச்சிகள் 6-35 தமிழில் செய்திகள் 6-45 உமையாள்புரம் ஜீ. கல்யாணராம ஐயர் 7-15 இந்தியக்கலை பேச்சு 7-30 அறிவிப்புகள் 7-45 மதராஸிலுள்ளபடி டி. சௌடையா வயலின் 9-00 பக்திப் பாட்டு † 9-20 ஆங்கிலத்தில் செய்திகள் 9-30 லண்டன் அஞ்சல் 10-00 ஒலிபரப்பு முடிவு.

ஞாயிறு ஜூன் 21

காலை 7-15 கீதாரம்பம் 7-20 தமிழில் செய்திகள் 7-30 வானெலி வாத்ய கோஷ்டி 7-40 திரைகானம் † 8-00 ஆங்கிலத்தில் செய்திகள் 8-10 டாக்கி கீதங்கள் 8-20 திருவாரூர் எம். கே. கமலாம்பாள் பாட்டு 9-00 ஒலிபரப்பு முடிவு.

12-00 படப் பாட்டுகள் 12-30 ஒலிமலர் 1-30 ஆங்கிலத்தில் செய்திகள் 1-35 சிதம்பரம் எம். கனகசபை பிள்ளை 2-00 தமிழில் செய்திகள் 2-05 சங்கீதம் † 2-30 ஒலிபரப்பு முடிவு.

மாலை 5-00 சிதம்பரம் எம். கனகசபைப் பிள்ளை 5-40 தேவாரகானம் 6-00 ஆங்கிலத்தில் செய்திகள் 6-10 நடைமுதல் நிகழ்ச்சி 6-15 கிராம நிகழ்ச்சிகள் 6-35 தமிழில் செய்திகள் 6-45 திருவாரூர் எம். கே. கமலாம்பாள் 7-15 இன்றைய சீனு பேச்சு 7-30 அறிவிப்புகள் 7-40 எங்கள் தபால் பெட்டி 8-00 சண்டிலவா நாயுடு சங்கீத உபன்யாசம் 9-20 ஆங்கிலத்தில் செய்திகள் 9-30 லண்டன் அஞ்சல் 10-00 ஒலிபரப்பு முடிவு.

திங்கள் ஜூன் 22

காலை 7.15 கீதாரம்பம் 7-20 தமிழில் செய்திகள் 7-30 வானெலி வாத்ய கோஷ்டி 7-40 படப் பாட்டுகள் † 8.00 ஆங்கிலத்தில் செய்திகள் 8-10 துதிப் பாடல் † 8-20 திருச்சேறை ஆர். சாமஸ்வாமி பிள்ளை நாகஸ்வரம் 9-00 ஒலிபரப்பு முடிவு.

1-00 டாக்கிப் பாட்டுகள் † 1-30 ஆங்கிலத்தில் செய்திகள் 1-35 திருச்சேறை கிருஷ்ணமூர்த்திப்பிள்ளை 2-00 தமிழில் செய்திகள் 2-05 கோடைக் கல்வி 2-30 ஒலிபரப்பு முடிவு.

மாலை 5-00 திருச்சேறை ஆர். சாமஸ்வாமிபிள்ளை நாகஸ்வரம் 5-45 இசைப் பயிற்சி 6-00 ஆங்கிலத்தில் செய்திகள் 6-10 நடைமுதல் நிகழ்ச்சி 6-15 கிராம நிகழ்ச்சிகள் 6-35 தமிழில் செய்திகள் 6-45 திருச்சேறை கிருஷ்ணமூர்த்தி பிள்ளை 7-15 ரஷ்யா ஒரு விசேஷ நிகழ்ச்சி 7-30 அறிவிப்புகள் ரஷ்ய ஜேர்மன் யுத்தப் போக்கு பேச்சு 7-45 பூதலூர் கிருஷ்ணமூர்த்தி சாஸ்திரி கோட்டுவாத்தியம் 8-30 டெல்லியிலுள்ளபடி ஆங்கிலப் பேச்சு 8-45 பூதலூர் கிருஷ்ணமூர்த்தி சாஸ்திரி கோட்டு வாத்தியம் 9-20 ஆங்கிலத்தில் செய்திகள் 9-30 லண்டன் அஞ்சல் 10-00 ஒலிபரப்பு முடிவு.

இருமல், இளைப்பு

சுகமானவர் மதிப்புரை.

கொழும்பில் 112, 2ம் குறுக்குத்தெருவில் ஓர் பிரபல ஜவுளிவர்த்தகர் சொல்லும் செய்தி:—

"ஆஸ்துமா" என்னும் இருமல், இளைப்பு, சுவாச காச நோயால் நான் இரண்டுவருஷகாலம் கஷ்டப்பட்டுக் கொண்டிருந்தேன்.

தண்டபாணி வைத்திய சாலையில்

தாளகபஸ்பமும் சித்திரமூலச் சூரணமும் ரூ. 12-50க்கு வாங்கி 25நாள் சாப்பிட்டேன். நோயின் கஷ்டங்கள் நீங்கிச் சுகமடைந்தேன்.

பின்பு இதுவரை 2வருடங்களாகியும் எனக்கு நோய் திரும்ப வரவில்லை. திடகாத்திரமாக இருக்கிறேன். என்னைப் பார்த்துவிட்டுச் சுமார் 100 பேர்கள் வரை தங்களிடம் மருந்து சாப்பிட்டுச் சுகமடைந்திருக்கிறார்கள். தங்களுக்கு என்றும் மறவாத நன்றி செலுத்துகிறேன். 19-10-40.

(ஒப்பம்) E. A. M. S. மரைக்காயர்.

ஸ்ரீ. M. S. மரைக்காயர்

இருமல், இளைப்பு, காசம், க்ஷயம், பீனிசம், தமேல் நோய்களுக்கு

25 நாள் தாளக பஸ்பம்
,, சித்திர மூலச் சூரணம் } ரூ. 12-50

நோய் விவரம் எழுதவும்.   கேட்லாக் இனாம்

தண்டபாணி வைத்தியசாலை,
பழனி (PALNI, S. India)

(Q. 59. 18-6-42—17-9-42)   (வி)

இந்தியர் வானசாஸ்திர வளர்ச்சி

(முதலாம்பக்கத் தொடர்ச்சி)

லும் சிங்கத்தலையும் பொருந்திய (Sphinx பெண் நரசிங்கம்) கட்டிடம் வானசாஸ்திரக் குறிப்பையுடையதாகும்.

கி. மு. 2000-ம் வருடமளவில் உத்தர அயனாந்த ரேகையானது கர்க்கடக இராசியிலமையாது சிங்க இராசிக்கும் கன்னி இராசிக்கும் இடையே யமைந்திருந்தது. இதனால் அக்காலத்தில் செய்யப்படும் யாகத்தின் பொருட்டுக் கட்டப்பட்ட முற்கூறிய கட்டிடம் சிங்கத்தலையுடனும் பெண்ணின் மார்புடனும் அமைக்கப்படலாயிற்று.

கி. மு. 2427-ம் வருடமளவில் விஷுவ ரேகையானது மேடம் என்ற இராசியிலமையாது இடபம் என்ற இராசியிலமைந்திருந்தது. இடபம் என்ற இராசியிலமைந்திருந்ததால் இந்துக்கள் எருதையும் பசுவையும் மேலாகக் கொண்டு அவற்றிற்கு வழிபாடாற்றி வந்தார்கள். அவ்வாறே எகிப்தியரும் எருதை வணங்கி வந்தனர்.

கி. மு. 2550 வரையில் இவ்வாறே மகநட்சத்திரமும், தட்சணாயனத்தின் ஆரம்ப ஸ்தானத்திலமைந்திருந்ததால் மித்திர தேசத்தில் வசித்த யாசிகர்களின் பாதிரிகள் விசேடநாட்களில் சிங்கத்தோலை அணியலாயினர். தங்களைச் சிங்கங்கள் என்றுங் கூறினர். இனி முற்கூறப்பட்ட விஷுவம் என்ன என்பதை விளக்குவாம்.

கிராந்தி வலயமும் (Eccliptic) விஷுவ ரேகையும் ஒன்றையொன்று சந்திக்கும் இடங்களே விஷுவம் என்று சொல்லப்படும். இவற்றுள் ஒன்றை இக்காலத்தில் சித்திரை விஷுவம் (Vernal equinox) என்றும் மற்றொன்றை ஐப்பசி விஷுவம் (Autumnal equivinox) என்றும் கூறுகிறோம். ஆனால் இந்த விஷுவங்கள் பிற்பக்கமாக ஒருவருடத்துக்கு 50. 2625 விகலைவீதம் அரக்கிக்கொண்டு செல்லுகின்றன. இவ்வாறு அரக்கும் விஷுவங்கள் 26000 வருடத்தால் திரும்பவும் முந்திய இடத்தையே யடையும்.

விஷுவ ரேகையில் சூரியன் உச்சங் கொடுக்கும் தினத்தையே இந்துக்கள் தமது வருடப்பிறப்பாகக் கொண்டனர். ஆனால் விசுவம் பின்னாக அரக்கிக் கொண்டு வருவதால் வருஷத் தொடக்கத்தையும் மாற்றிக் கொள்வாராயினர்.

முன்னொரு காலத்தில் இடபராசி விசுவத்தி லிருந்த பொழுது, இடபராசியின் தொடக்க நட்சத்திரமாகிய கார்த்திகை நட்சத்திரத்தில் சூரியன் பிரவேசிக்குங் காலத்தை வருடத்தொடக்கமாகக் கொண்டார்கள். பின்னர் கி. பி. இரண்டாம் நூற்றாண்டளவில் இருந்த வராகமிஹிரர் விஷுவம் மேடராசியில் வந்து விட்டதென்பதையறிந்து மேடத்திற் சூரியன் பிரவேசிக்குங் காலத்தை, அதாவது மேடாரம்பமாகிய அசுவினி நட்சத்திரத்திற் சூரியன் பிரவேசிக்குங் காலத்தை வருடத் தொடக்கமாகக் கொள்ளச் செய்தார். இக்காலத்தும் அவர் கொள்கைப்படியே மேடாரம்பமே வருடப்பிறப்பாகக் கொள்ளப்பட்டு வருகிறது. ஆனால், இப்பொழுது குறித்த விசுவம் அசுவினி நட்சத்திரத்திலிருந்து பின்னாக 23 பாகை வரையில் நகர்ந்து போய் மீனராசி (உத்தரட்டாதி இரண்டாம் பாதத் தொடக்கத்தி)லிருப்பதால் இந்தியர் யாவரும் வருடப்பிறப்பை சரியான தினத்திற் கொள்ளாது 23 நாட்கள் பிந்தியே கொண்டாடுகின்றனர். இன்னும் 5000 வருடத்தால் மீனராசியின் தொடக்கம் அதாவது பூரட்டாதி நட்சத்திரம் விசுவரேகையிலமைய அப்பொழுது ஒரு மாசத்தை இடையில்விட்டே வருடப்பிறப்பைக் கொள்ளும்படி நேரிடும்.

—(வரும்)

பக்தி

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

டத்தில் காண்பது இயல்பாகும்.

இவ்வுலகத்தில் இடைவிடாது தோன்றலும் மறைதலும் ஒழிய வேண்டும் என்று தெளிந்த பெரியோர்கள் கடவுள் வழிபாட்டில் ஈடுபட்டார்கள். மாணிக்க வாசகர் தன்னெஞ்சைக் கடிந்து கொள்ளுகிறார்.

"ஆடுகின்றிலை; கூத்துடையான்
  கழற்கன்பிலை; என்புருகிப்
பாடுகின்றிலை; பதைப்பதுஞ் செய்
  கிலை; பணிகிலை; பாதமலர்
சூடுகின்றிலை; சூட்டுகின்றதுமிலை;
  துணையிலி பிணநெஞ்சே!
தேடுகின்றிலை; தெருவுதோறலறிலை;
  செய்வதொன் றறியேனே"

அருணகிரியாரும் தனக்குப் புத்தி புகட்டிக் கொள்வதுபோலும் உலகறியும் பொருட்டும், சுவாமிமலைத் தேசிகனை அருள வேண்டி அழைக்கிறார்.

"எத்தத் திசையினு மலையினு
  மூவரியி
னெத்தப் படியினு முகடினு முளபல
எத்தச் சடலமு முயிரிசை பிறவியி
  லுழலாதே
இத்தச் சடமுட னுயிர்நிலை பெறநனி
  னம்பெற கழலிணை கனிமரு
  மலர்கொடு
என்சித் தமுமன முருகிலை கரு
  தியின் முறையோடே
சத்தித் தாளறா சிவசிவ சரணெனக்
  கும்பிட் டிணையடி யவையென
  றலைமிசை
தங்கப் புளகித மெழ இரு விழி
  புனல் குதிபாயச்
சமயைக் கொடியிடை விபுதையி
  னழகுறு
வத்தத் மருகட பிரசா ணழகுற
சத்தச் சபைதனி லெனதுள
  முருகவும வருவாயே"

இந்த இரண்டு மேற்கோள்களும் போதுமானவைகள். அடியார்கள் தன்மையையும், அவர்கள் உயர்ந்த நோக்கங்களையும், அவர்கள் வேண்டும் பேறதையும் தெளிவாய்க் காட்டும். "போற்றுந் தகையற்ற போக்கிலேன்" என்றும், "பேசாத காரணமெல்லாம் பிரவாகமே" என்றும் முடியும் திருமுறையிலடங்கிய சிவநூல்கள் மூர்க்கரைக் கூட நல்வழியில் திருப்பக் கடவுள் பக்தி செய்யத் தூண்டும்.

பக்தனுக்குப் பக்தி தாய் போன்றவள். அருட் சக்தியின் வடிவே எனினும் மிகையாகாது. பக்தனுடைய குழந்தைக்குப் பக்தியாகிய தாய் செய்வது யாதெனின், ஆனந்தக் கண்ணீரால் புளகாங்கிதமாகக் குளிப்பாட்டுகிறாள்; நிர்மலம் என்னும் ஆடையை உடுத்துகிறாள்; வாக்கென்னும் சங்கால் நாதன் சரித்திரமாகிய பாலைப் பருகச் செய்கிறாள்; ருத்ராக்ஷ விபூதியால் அலங்காரம் செய்கிறாள். கடவுள் நினைவு அல்லது தியானமாகிய தொட்டிலிலிட்டுக் காப்பாற்றுகிறாள். இக்காலத்திய சிறந்த நாகரிகம்-பாழ்ங்கொம்பு சிறந்த மூளிக்கழுத்து, சினிமாப் பாட்டுக் கேட்கும் செவிகளும் கண்களுமாகிய இவைகளே உயர்ந்த இலட்சணங்கள் என்னும் உயர்ந்த நோக்குடையவர்களுக்கு மிகவும் தாழ்ந்த விண்ணப்பம். சாலை காப்பியில் சிறிது விபூதி யிட்டுச் சாப்பிட்டால் நலன்கள் தானே வரும்.

சகலரும் கடவுளின் அடிமைகள். ஒவ்வொருவனும் இப்புவியில் தோன்றுமுன் ஈசனுக்கு அடிமைச் சீட்டு எழுதிக் கொடுத்துவிட்டு வந்திருக்கிறான்; "உன்னை என்றும் மறவேன்; உன்பணி செய்து கிடப்பேன்" என்பதே அதன் மூலசாரம். மேலும் கர்ப்ப வாசமாகிய சிறையிலிருக்குங்கால் சீவன் புலம்புகிறது; "என்னே? என் மேல் சந்தேகமா; இது என்ன சோதனையோ; உன்னை மறப்பேனோ; விடுதலையில்லையோ." உலகிற் பிறந்து வளர்ந்து விட்டோமானால் எல்லாம் மறந்து போய் விடுகின்றன. வாக்குப் பிறழ்வதே கொடுங்குற்றம். எழுதிக் கொடுத்த அடிமைச் சீட்டுப்படி நடவாதவனை என்னவென்று சொல்லுவது? சுந்தரமூர்த்தி நாயனார் சரித்திரத்தை மறக்கலாமோ? பெரியபுராணம் போதிக்கவும் சாதிக்கவும் முடியாது. அவர்பாடிய திருத்தொண்டர்கள் கூட்டத்தைக் கோயில்களில் இன்றும் பார்க்கிறோம்; தொன்று தொட்டு வெகு காலமாய்ப் பரம்பரைச் சாதிகளுக்காக அல்ல. நாயன்மார்களைக் கற்பனைத் தோற்றங்கள் என்று கூறத் துணிந்துவிட்டால் உலகம் சிரிக்கும். அமுது படைக்கு ஒருவருமே இரங்கார். சுந்தரமூர்த்தியை ஆவணம் இட்டு அசலைக் காட்டி ஈசன் ஆட்கொள்ளவில்லையா! பெருந்த ஞானியாகிய தாயுமானவர் 'என்றும் அன்றே உன்னடிமை யல்லவோ', "குருபர முகமாய் எனைக் கொண்டு பதம் வைத்தருளிய மவுன மந்திரத்தினைப் பழைய வினையை விலக்கும் பதத்தினை யருளாய்" என்றார் அருணகிரியாரும். சரித்திரங்களும் சான்றுகளும் இப்படியிருக்க நாமோ மனமே சில காலத்தை வீணாக்கிக் கொண்டிருப்பது ஒரு விந்தைதான். 'அடாது செய்தவன் படாது படுவான்' என்பது பழமொழி. அவ்வாறாகாமல்; நன்னிலைப் பட்டவராகிய இடரில் வீழ்ந்து அல்லலுறோம்.

(வரும்)

—சித்தாந்தம்

ஆசிரியரின் உரிமைகள்

அகில இலங்கை ஆசிரியர் சங்கத்தின் ஆலோசனைகள்

இலங்கை உபாத்தியாயர்களின் உரிமைகளைப்பற்றிச் சட்டமொன்று கொண்டுவர அகிலஇலங்கை உபாத்தியாயர்கள் சங்கத்தின் கிளைநிர்வாகசபை சில ஆலோசனைகள் கூறியிருக்கிறது.

முதலில் ஓர் உபாத்தியாயர் நியமிக்கப்படும்பொழுது அவர் ஒருவருஷத்திற்குத் தற்காலிகமாக நியமிக்கப்படவேண்டுமென்று கூறப்படுகிறது. பள்ளிக்கூடம் சம்பந்தப்பட்ட விஷயங்களைத்தவிர, மற்றக்காரியங்களை உபாத்தியாயர்களைச் செய்யச்சொல்லக் கூடாது. பள்ளிக்கூட நேரங்களுக்குப்பிறகு உபாத்தியாயர்கள் பள்ளிக்கூடத்தின் நலன்களுக்குப் பாதகமில்லாத முறையில் மற்றத்தொழில்களில் ஈடுபடுவதைத் தடுக்கக்கூடாது.

வித்தியாகர்த்தரின் அங்கீகாரமின்றி உபாத்தியாயர்களுக்கும் மனேஜர்களுக்கும் எவ்வித ஒப்பந்தமுஞ் செய்துகொள்ளக்கூடாது.

எந்த மனேஜரின் உத்தரவாவது உபாத்தியாயர்களின் சுதந்திரத்தையும் உரிமைகளையும் பாதிக்கிறதென்று வித்தியாகர்த்தருக்கு அதிகாரம் கொடுக்கப்படவேண்டும்.

மற்றும் இவ்விதமான யோசனைகளை அகில இலங்கை உபாத்தியாயர்கள் சங்கத்தின் கிளைநிர்வாக சபை வெளியிட்டிருக்கிறது.

தாய்மை

(முதலாம் பக்கத்தொடர்ச்சி)

வாழும் சமுதாய வாழ்க்கையில், எல்லா வருணத்தார்க்கும் ஆசிரமத்தார்க்கும் ஒரே வகையான ஒழுக்கம் உரியதாதல் இல்லை. வருணம் ஆச்சிரமம் இடம் காலம் காரணம் முதலியன பற்றி ஒழுக்கமும் பலவேறு வகையாய் விகற்பப்படும். எல்லாப் பகுதியினர் வாழ்க்கைக்கண்ணும் தூய்மை சமானமாக ஓம்பப்படுதல் வேண்டும் என்னும் நியதியுமில்லை. அறிவாற்றல்களின் ஏற்றத் தாழ்ச்சிக்குத் தக்கபடி வாழ்க்கைக்கண் வேண்டப்படும் தூய்மை கூடியும் குறைந்தும் இருத்தல் சகசமானது அறிஞர்யாவர்க்கும் ஒப்ப முடிந்த உண்மை. "இல்வாழ்வார்க்காயின் தமக்கோர் கிளைபாட்டவனைக் கருதியால் அவனை வஞ்சித்து கோடல் நினைந்த பொருளை யக்ஙனம் கொள்ளினும் அமையும். அறத்தார்க் காயின அக்கருதிய வழிப்பு பெரிதோர் இழுக்காம். ஆகலின், இது அறவறமாகிறது" எனக் கூறுங்காற் பரிமேலழகரும் இவ்வுண்மையை வலியுறுத்தல் காண்க.

நித்தியாநித்த வஸ்து விவேக முதல் மெய்ப்பொருள் காட்டும் தத்துவியதனசன சற்குருகாண் துணையால் மெய்ஞ்ஞான வடிவமதற்குச் சாதனமாய் நிலவும் அந்தக்கரணசுத்தி, வருணச்சிரம தருமம் [illegible] கருமபத்தியும் அட்டாங்கத்தாற் கூடிய யோக மார்க்கத்தாலும் கைகூடும் என்பதில் ஐயமில்லை.

"அந்தக்கரண சுத்தி நா அதிவை
  யதிநற சாதனமாம்
அந்தக்கரண சுத்தனுக்குறையுங்
  கரும மாரணவகை"

என்றும்

"கருமமும் யோகமாறுங்
  காணத்தை புனிதமாக்கப்
பொருமிடர் வாயிலந் [illegible]
  புத்துழல் கறவுயோல
தெருமா அணணிநதஅன
  தெளித்தவக் காணக்கனு
திருமல் குரும்ச விாக்கனன
  மணர்வுதிக்கும்"

"நித்திய நிமல னென்னும்
  நினைவு இனிக்கமாக
பொய்த்தசழி புடம்பு டட்டைப்
  பொருந்திப்பபோருள வெறுத்து
மெய்த்தருள் ஞான நன்னை
  விருமபினன் சென்று சார்ந்து
தத்துவ முதல் நின்ற தனியதி
  விணையே சாரும்"

என்றும் பிரபுலிங்கலீலையில் வருவனவற்றை நோக்குக.

வருணச்சிரம முறையின பற்றி ஆன்றோர் விதித்தன செய்து விலக்கியன வொழிதலாகிய தருமம் போணச் சித்தசுத்தி கைகூடிய செவ்வநெறியில், காமக்குரோதாதி இச்சை புணர்வுகளை செலுத்திய வழிச் செல்லாது, ஆன்றோர் காண்ட வழி நின்று, சரியது பிழையது என அறியும் பகுத்தறிவு கருவியாகத் தன் கடமையை நிறைவேற்று முகத்தானே, ஒருவன் தன் னிச்சைகளைத் தானேயடிவழிப்படுத்தி யடக்கி யாளும் சித்த சுத்தி நிலைக் காலகதியி லடைவனென்க. இக்கூறிய கருமத்தால இச்சைகளினை வழி கெட்டடங்குதல் அந்த? எனினும், இவ்வாறெய்தும் சித்தசுத்தி வாழ்க்கையின் பரமப் பிரயோசனத்தை யுதவுந் தகைமைதன்றாதலின், உயிர்க்குறுதி பயக்குந் தகைமைத்தாகு மந்தக் கரண சுத்தியைப் பெறுதற்கு இயமம், நியமம், ஆசனம், பிராணாயாமம், பிரத்தியாகாரம், தாரணை, தியானம், சமாதியென்னு மட்டாங்கத்தாற் கூடிய யோகாப்பியாசமே பெரிதும் வேண்டப்படும்; சித்தாசன முதலிய சில ஆசனப் பயிற்சி சிற்றின்ப நோக்கிய காம இச்சை யடக்குதற் குபயோகப்படுமென்ப. பிராண வாயுவின் அடக்கம் மனோநிக்கிரகத்தை யுதவுமென்னும், பிரத்தியாகாரம் தாரணை தியானம் சமாதியென்னுமிவை மனோநிக்கிரகத்தைப் படிப்படியாய் முதிர்ச்செய்து நின்மல அறிவாதித்த மெய்ப்படும் நிர்க்குண சமாதியைத் தருமென்கும் ஆகும். இவ்யோகசாதனை விரிவுன் நுட்பங்களை யோகநூல் கற்றும் அனுபூதி பெரியார்பாற் கேட்டும் தெளிக.

—(வரும்)

சிவதொண்டன்.

மிஸ்டர் குலரத்னவின் வெற்றி

சனிக்கிழமை பலப்பிட்டியில் நடந்த உபதேர்தலில், மிஸ்டர். பி. டி. எஸ். குலரத்ன அதிகப்படியான 3900 வாக்குகளால் வெற்றிபெற்றார். அத்தேர்தல் முடிவு விபரம்:-

மிஸ்டர். பி. டி. எஸ். குலரத்ன 17,900 வாக்குகள்.

மிஸ்டர். ஈ. ஏ. டி. செய்யா விக்கிரமரத்ன 14,000 வாக்குகள்.

மிஸ்டர். பியதாச டி. சில்வா 7000 வாக்குகள்.

சைவமும் தாவர போசனமும்

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

துக்காகவும் பல நாற்றுக்களைக் காவ ஆடுகோழிகளை வதை செய்கின்றனர். நமக்குக் கொண்டாட்டம் ஆடு கோழிகளுக்குத் திண்டாட்டம். நமது அருட் கடவுள் எழுந்தருளியிருக்கு மிடத்தை அசுத்தமாக்கி விடுகின்றார்கள். விடாய்க் காற்றி வெட்டுவதென்றால் மற்றச் சிலரிலும் பார்க்க நம்மூரில் வசிக்கும் சில உயர்தர மாணவர்களுக்குப் பெரிய சந்தோஷம். தாவர உணவென்றால் மிகவெறுப்பு, இவர்கள் கற்றதனாலாய பயனென்னே?

இப்படியாக ஆடு கோழிகளை வதைத்துச் செய்யும் வேள்விகளைச் சைவம் யாண்டும் விதித்திலது. சைவம் என்பது அருட்சமயம். அச்சமயத்தில் விலக்கப்பட்டவைகளில் புலாலுண்ணலும் ஒன்றென முன்னர் கூறினோம். "கங்கையிற் படிந்திட்டாலும் கடவுளைப் பூசித்தாலும் மங்குலபோல் கோடிதானம் வன்னலாய் வழங்கினாலும் சங்கையிலாத ஞானதத்துவம் உணர்ந்திட்டாலும் பொங்குது புலால் புசிப்போர் போய்நரகடைவரன்றே" என்றார் பெரியோர்களும். அறியாமையால் கிடக்கும் நம்மூர் மூட சனங்கள் தற்ப அறிவற்ற சீவராசிகளைக் கொன்று புசித்துத் தங்கள் இன்பத்தைத் தேடிக்கொள்ளுகின்றார்கள். கடவுளாற் படைக்கப்பட்ட ஜீவசெந்துக்கள் எல்லாவற்றிற்கும் இன்பதுன்ப முண்டு. அப்படியாயின அவையலற-உயிர்பதற-உடல் துடிக்க-கொன்று புசிக்கும் கொடுங்கணக்கான சனங்களை தாம் நரகு சென்று கூறித் திரிதல் எவ்வளவு மதியீனம்! தேவைக்குப் போதுமான தாவர உணவுகள் அதிகமாக அமைக்கப்பெற்றிருக்கவும் அவ்வுணவு சமைத்து வலுவையும் ஆரோக்கியத்தையும் தருதவும், அறபசிவ ராசிகளை அவஸ்தைப்படுத்துவதேனோ? "அகிம்ஸா பரமோ தர்ம" கொல்லாமையே சிறந்த தருமமாகும். தாவர உணவிலே சீவசத்து அதிகம் இல்லையென்று வாதாடுவோர் பலர். இவர்களின் அறியாமையை என்னென்பது!

விரத அநுஷ்டான காலங்களில் மாமிச போசனத்தைத் தீண்டலாகாதாம். அதனால் கடவுள் தண்டனைக்கு ஆளாக வேண்டுமாம். திருக்கோயிலிற்றான் அருட்கடவுளிருக்கிறார். திருக்கோவில் விரதகாலங்களில் மாமிச உணவை புசித்தாற்றான் கடவுளுக்குத் தெரியுமென்பது இவர்களின் எண்ணம் போலும்.

ஜீவகாருண்ணியத்தையே மூல தர்மமாகக் கொண்ட சைவசமயத்தாயின் மக்களாகிய நாம் இறைவனுடைய அருட்கடவுளின் படைப்புக்களைச் சிறைப்படுத்துதலும் சிதைப்படுத்துதலும் அழகாகுமா? மறுமைக்குத் தேடவேண்டிய புண்ணிய பொக்கிஷம் தாவரபோசனத்தாலும் சாத்வீக குணத்தாலும் தேடப்படவேண்டியதல்லவா? "கொல்லான் புலாலை மறுத்தானைக் கைகூப்பி எல்லாவுயிருந் தொழும்" என்றார் திருவள்ளுவநாயனாரும். அத்தோடமைய "கொல்லாமை எத்தனை குணக்கேட்டை நீக்கும்" என்றார் தாயுமான சுவாமிகளும்.

சைவசமயத்தின் முதல் நோக்கு பாசத்தை அகற்றல் அன்றோ? அதற்கும் தாவரபோசனத்திற்கும் நெருங்கிய தொடர்புண்டு. இளையான்குடிமாற நாயனார் தமதில்லத்திற்போந்த சிவனடியாருக்கு அமுதுபடைத்தற்குத் தாவரத்தையே எடுத்தனர். அதைச் சேக்கிழார் சுவாமிகள்

"குழிநிரம்பாத புன்செய்க் குறும்
  பயிர்தடவிப்
பாசப்பழி முதல் பறிப்பார்போல
  பறித்தவை கறிக்கு ஈக"

எனக்கூறிப்போந்தார்.

அன்பிலும் அறிவிலும் சீர்திருத்தத்திலும் ஜீவகாருண்யத்திலும் தலைசிறந்து விளங்கியவர் நம் முன்னோர்களல்லவா? மெய்ஞ்ஞானநூல்களையும் சன்மார்க்க போதகங்களையும் ஐயந்திரிபற உலகிற்கு ஆக்கியளித்தவர் சைவத்திருமணம் கமழும் பெரியோர்களல்லவா? சைவ ஆகமநூல்களிலே விதிக்கப்பட்டவைகளை அநுசரிப்பது சைவர்களது செயலாகுமா? மோட்ச இன்பத்தையடைவதற்குரிய சிறந்த வழியொன்றிருக்க நாமேன் அல்லற்படவேண்டும்.

தாவரபோசனம் உண்பவனது மனம் பரிசுத்தமடைவதோடு அவனது உடல் பொருள் ஆதியனவும் பரிசுத்தப்படுகின்றன. தாவர போசனம் உண்பவனது இல்லமே தூய்மையடைகிறது. நித்திய நிர்மலமான கடவுளை மனதாரச் சிந்திக்கும் காலமும் அப்பொழுதே.

மு. சண்முகநாதன்
(கருகம்பனை)

கச வியாதிக்கு வசிலோசைன் மருந்து

(Cure For Consumption;- Bacillozine Specific)

பலவிதமான மருந்துகளைச் சாப்பிட்டும் வியாதி சுகப்படாமல் இருப்பதற்குக் காரணம் டியுபெர்க்கிள் கிருமியின் தன்மைதான். வசிலோசைன் மருந்தினால் டியுபெர்க்கிள் கிருமித் தன்மையுள்ளதும் இல்லாததுமான கசம், இருமல், தொய்வு, பீனிசம், முழங்கால் வாதம், சூலை வியாதிகளும், தலை, கண், காது, மூக்கு, முகம், வாய், தொண்டை, மூச்சுப்பை, இரத்தாசயம், குடல், கெற்பப்பை, சலப் பை, புண், பிளவைரோகங்களும் கெதியில் பூரண சுகத்தையடைகிறதுமல்லாமல் வசிலோசைன் மருந்தைப் பாவிக்கத் தொடங்கிய 12 மணி நேரத்திற்குள் மனச் சந்தோஷத்தையும், ஊக்கத்தையும், புதிய பலத்தையும் ஆறுதலான நித்திரையையும் அடையலாம்.

வீ—பீயில் மருந்து பெறுவோர் ரூபா இரண்டு முற்பணம் அனுப்பவும்.

15 நாள் மருந்து ரூபா 7—75

விலாசம்:— Dr. S. V. Tambiah,
Dutch Road, Uduvil, MANIPAY, P. O.

Y 17 27-4-42—26-4-43

பிரதானமான அறிவித்தல்

லைசென்ஸ்பெற்ற பல்லுக்கட்டுபவரும்
கண்பரிசோதகருமாகிய
மிஸ்டர். S. சாஸ் பத்திராண

இப்போது கிறண்ட் சர்ச்சுக்கெதிரே மெயின்ஸ்ட்ரீட்டில் 43-ம் நம்பர் இல்லத்தில் இருக்கிறார்.

இவர் ஒவ்வொரு மாசத்திலும் 1-ந் திகதி தொடக்கம் 15-ம் திகதிவரை அங்கு இருப்பார்.

ஏனைய நாட்களில் பின்வரும்விலாசத்திற்குக் கடிதங்களை அனுப்புக.
தம்பராவத் தோட்டம், வரிப்பொலா, வடமேல்மாகாணம்.

புதிய [1942] பாடத்திட்டத்திற்கு
இயைந்த
தமிழ் இலக்கிய வாசகங்கள்

5-ம் 6-ம் 7-ம் வகுப்புகட்குரியவை

1	இலக்கியவாசகம் முதற்பாகம் சதம்	15
2	,, இரண்டாம்பாகம் சதம்	20
3	,, மூன்றாம் பாகம் சதம்	25

செந்தமிழ்க் கருவூலம்

திரு. வித்துவான் ந. சுப்பையபிள்ளை அவர்களால் இயற்றப்பட்ட உரையுடன் கூடியது. J. S. C. பரீட்சைக்கு ஆதாரமாக ஆறும் ஏழாம் தரங்களில் மாணவர்க்குச் செய்யுளிலக்கிய அறிவை வளர்த்தற்கேற்ற பாடபுத்தமாகக் கொள்ளத்தக்கது.

மனேஜர்
யாழ்ப்பாணம், சைவப்பிரகாச யந்திரசாலை.

தி மலாயன் டிரேடிங் கொம்பனி

(சிங்கப்பூர்க் கொம்பனி)

இரும்பு, பித்தளைச்சாமான்கள், சீமேந்துவகைகள்
விற்பனவு செய்வோர் பெரியகடை, யாழ்ப்பாணம்

"புறொப்ரைட்டர்"
K. A. இரத்தினசிங்கம்

Y 19. 4-3-42—3-3-43

திருநெல்வேலி ஒற்றுமை நிதி (வரையறுத்தது)

அதிகாரம் பெற்ற மூலதனம் ரூபா 500,000.

ஒன்று 25 சதமாக 80 மாதங்கள் செலுத்தி ரூபா 25ம் ஆதாயமும் பெறலாம்

வங்கித்தொழிலும் வியாபாரமும்
இலாபகரமாய் நடக்கின்றன.

தேசியகருமங்களை வளர்ப்பதால் சுயேச்சைபெறமுடியும்.

இலகுவான முறையில் இறுக்கக்கூடிய கடன்கள் கொடுக்கிறோம்.
உயர்ந்த வட்டி விகிதங்களோடு தவணைக்கும்
நிபந்தமாயும், சம்பாத்தியத்திலும், நடைக்கணக்கிலும்
பணம் ஏற்றுக்கொள்வோம்.

பங்குகளுக்கு முந்துங்கள்!

வ. சோமசுந்தரம்,
காரியாதிகாரி.

(வி)   (Y. 164. 1-11-41 to 31-10-42)

வியாபாரத்திற் கழகு விளம்பரஞ் செய்தல்

அதற்குகந்தது இந்துசாதனம்

விளம்பர விகிதம்

முதன்முறைக்கு;
ஒருகலம் ரூபா 10.00   அரைக்கலம் ரூபா 6.00
கால்கலம் ரூபா 4.00   ஒரு அங்குலம் ரூபா 1.00

அடுத்த முறைகட்கு மேற்படி விகிதங்களிற் பாதி

காலம் சேர்ந்த விளம்பரங்கள் விசேஷ விளம்பரங்கள் விஷயத்தில் மனேஜரிடம் நேரிற் கண்டேனும் எழுத்து மூலமாகவேனும் ஒழுங்கு செய்யலாம். உடன்படிக்கை அனுப்பப்படா விளம்பரங்கள் ஏற்கப்படமாட்டா.

பத்திரக்கிரயம்

வருஷம் ஒன்றுக்கு யாழ்ப்பாணப்பட்டினசங்க எல்லை

தமிழ் ரூபா	5.00	இங்கிலீஷ் தமிழும்	9.00
இலங்கை இந்தியா	8.00	இங்கிலீஷ் தமிழும்	12.00
தொலைப்பகுதி	9.00	இங்கிலீஷ் தமிழும்	13.00

தனிப்பிரதி சதம் 5

முற்பணமாக
அனுப்பப்படல் வேண்டும்

வான்முகில் வழாதுபெய்க மலிவளஞ் சுரக்க மன்னன்
கோன்முறை யரசுசெய்க குறைவிலா துயிர்கள் வாழ்க
நான்மறை யறங்களோங்க நற்றவம் வேள்விமல்க
மேன்மைகொள் சைவநீதி விளங்குக வுலகமெல்லாம்.

Printed and Published by PANDIT V. T. SAMBANDHAN, residing at Vannarponnai West, Jaffna, for and on behalf of the Proprietors, the Saiva Paripalana Sabhai Jaffna, at their Press, the Saiva Prakasa Press, Vannarponnai, Jaffna, on Thursday 18th June, 1942.